# மன்னா

விலை ரூபா 15.00

மன்னார் மறை மாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு 13 | மார்கழி 2000 | (தனிச்சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 67

மன்னார் மறைவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR


# 2000 கிறிஸ்மஸ் 2001 புதுவருட சிறப்புமலர்



## விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது (லூக்.1:79)

## மன்னா அன்பு நெஞ்சங்களே!

உங்களை நெஞ்சார நினைக்கின்றோம். அன்போடு நன்றி கூறுகின்றோம். கடந்து செல்லும் இந்த ஆண்டில் மன்னாவின் வளர்ச்சிக்காக நீங்கள் கைகொடுத்து உதவியுள்ளீர்கள். இனி வரும் புதிய ஆண்டிலும் உங்கள் பணியை முழு நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம். உங்கள் கரங்களை தொடர்ந்தும் எங்கள் முன் நீட்டுங்கள். இறுகப் பற்றிக் கொண்டு மன்னா வழியாக ஆண்டவரின் நற்செய்தியை அறிவிப்போம். நமது மறை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் மன்னாவைப் பெற்று பயனடைய முழு முயற்சி செய்வோம். மன்னா வழியாக இறைவன் ஒவ்வொருவருடைய இதயக் கதவையும் தட்டும்படி செய்வோம். இப்பாரிய பணியில் புதிய ஆண்டில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பயணிப்போம். "கடவுள் நம்முடன் இருக்கின்றார்." (மத்.1:23)

அமைதியின் அரசராம் இயேசு கொண்டு வந்த அமைதி உங்கள் உள்ளங்களில் நிலைக்க வாழ்த்துகின்றோம், ஆசிக்கின்றோம், செபிக்கின்றோம். உங்களுக்கு எமது அன்பும், அருளும், சமாதானமும் நிறைந்த 2000 கிறிஸ்மஸ், 2001 புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நிறைந்த ஆசீருடன்
அருட் பணியாளர் நேசன்
பதிப்பாசிரியர், "மன்னா"


## ஆயரின் செய்தி



சமாதானத்தின் ஒளிக் கீற்றுக்கள் தோன்றியுள்ள இந்நேரத்தில் மீண்டும் ஒரு கிறிஸ்மஸ் விழாவை நாம் சந்திக்கின்றோம். கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் இரண்டாயிரமாம் ஆண்டு மாபெரும் யூபிலி விழாவினுள் நாம் நுழைந்து விட்டோம். இந்த விழாவானது நம்மை புதுப்பித்தலின் பாதையில் அடியெடுத்து வைக்க அழைக்கின்றது. புதிய மனிதர்களாக வாழ தூண்டுகின்றது. இன்றைய சூழ்நிலையில் சமாதானத்திற்கான பாதை எத்துணை கடினமானது என்பதை நாம் அறிவோம். ஆயினும் நாம் நம்பிக்கை அற்றவர்களாக அல்ல, சமாதானத்திற்கான நம்பிக்கையோடு தொடர்ந்தும் காத்திருப்போம். ஏனெனில் மீட்பராகப் பிறக்கின்ற இயேசு நமக்கு சமாதானத்தின் வழியை திறந்து வைப்பார் என்று நம்புவோமாக!. மன்னா வாசக அன்பர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது ஆசீரையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

உங்கள் மேல் பற்றுள்ள
+ இராயப்பு யோசேப்பு
மன்னார் ஆயர்

## சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது (எசா.9:2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் இரக்கத்தாலும் புனித ஆட்சிப் பீடத்தின் ஆதரவாலும்

மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை

மன்னார் மறை மாவட்டத்து இறை மக்களுக்கு எழுதும்

# திருவருகைக் காலத் திருமடல்

கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

## முன்னுரை

கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் இரண்டாயிரமாம் ஆண்டு மாபெரும் யூபிலி இதோ அண்மித்து விட்டது. இந்த மாபெரும் யூபிலிக் கொண்டாட்டமானது நாம் புதிய மனிதர்களாக புதுயுகத்துக்குள் காலடி எடுத்து வைக்க நம்மை தூண்டிநிற்கின்றது. தீர்க்கப்படாத நீண்ட கால யுத்தம், புலம் பெயர்வு, யுத்த அனர்த்தங்களின் தாக்கங்கள் இவற்றிற்கு முழுமையாக விடை காணாத நிலையில் நாம் இந்த யூபிலி விழாவைக் கடந்து செல்லவிருக்கின்றோம். நாம் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இந்த மாபெரும் யூபிலி விழாவை இந்த மார்கழி இருபத்தைந்தாம் திகதி என்னவிதத்தில் உடனடி ஆயத்தங்களுடன் சிறப்புறக் கொண்டாட வேண்டும் என்று பங்குகளுக்கு மறை மாவட்ட யூபிலிக் குழு பரிந்துரைகளைக் கொடுத்துள்ளது. கிடைத்தற்கரிய இப் பெருவிழாவிலே பெற்றோர்-இளைஞர்-சிறுவர் ஆகியோர் அனைவருமே புதிய மனிதனின் இயல்பாகிய அன்பை அணிந்து கொண்டு அன்பிய வாழ்வைத் தமது வாழ்க்கை முறையாகத் தழுவிக் கொள்ள தங்களை அர்ப்பணம் செய்வதே இவ்விழாவின் உச்சமாக அமையும். இவ்வேளையிலே எமது அன்பிய வாழ்வின் தன்மையையும் அதன் செயற்பாடுகளையும் பற்றிச் சிந்திக்க உங்களை அன்போடு அழைக்கின்றேன்.

## அன்பிய வாழ்வே திருச்சபையின் வாழ்வு

அப்போஸ்தலர் காலத்திலே திருச்சபைக்கு அத்திவாரமிட்டு வளர்த்த புனித சின்னப்பர் திருச்சபையை ஓர் அன்பியமாகவே சித்தரிக்கின்றார். இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு மீட்படைந்த மக்கள் யாவரும் தூய ஆவியால் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு திருக்கூட்டமாக உருவாகின்றனர். இத் திருச்சமூகமே திருச்சபை (Ecclesia) எனப்படுகின்றது. திருச்சபையின் உறுப்பினர் தனிப்பட்ட நபர்களாக இருப்பினும் கிறிஸ்துவுக்குள் அவர்கள் பெறும் ஞானஸ்நானம் அவர்களை ஓர் நட்புறவில் ஒன்றித்து வாழும் தோழமைச் சமூகமாக்குகின்றது.

கிறிஸ்துவோடு திருச்சபையில் எப்படிப்பட்ட ஒரு நட்புறவிற்கு நாம் இறைவனால் அழைக்கப்பட்டிருக்கிறோமோ. (காண்க 1 கொரி 1.9) அதே போன்ற ஒரு நட்புறவையே ஒருவர் ஒருவரோடும் கொண்டிருக்க நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். இவ்வுண்மையை "கொய்னோனியா" (Koinonia) எனும் கிரேக்கச் சொல்லினால் புனித சின்னப்பர் விளக்குகின்றார். இவ்வார்தையின் பொருள் ஒன்றிப்பு, பங்கேற்றல், பகிர்தல், தோழமை என்பனவாகும் . நமது அன்பியங்களில் விளங்க வேண்டிய திருச்சபையின் தன்மைகளை இந்த கிரேக்க பதம் புலப்படுத்துகின்றது.

## அன்பியம் ஓர் திரு ஒன்றிப்பு

கொய்னோனியா எனும் தோழமை அனுபவத்தின் மூலமாக தூய ஆவியினூடாக இயேசுக் கிறிஸ்துவில் இறைவனோடும் அயலவரோடும் கொள்ள வேண்டிய உறவு திரித்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய உறவு திரு ஒன்றிப்பு (Communion) என அழைக்கப்படுகின்றது. இறைவன் பிதா, சுதன், பரிசுத்த ஆவியென தம்முள் ஒரு சமூகமாக திரு ஒன்றிப்பில் இணைந்து வாழும் ஏக திரித்துவம். அன்பியத்தில் நாம் ஒருவர் ஒருவரோடு கொள்ளும் விரிந்ததோர் உறவிற்கு இதுவே அத்திவாரமாகும்.

மேலும் நாம் பெறும் ஞானஸ்நானம் கிறிஸ்துவுடனான ஒன்றிப்பைப் போன்று ஒருவர் ஒருவருடனும் எங்களை ஒன்றுபடுத்துகின்றது என்ற உண்மையைப் புனித சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் தெளிவு படுத்துகின்றார். எவ்வாறெனில், "கிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லோரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை. அடிமையென்றும் உரிமைக் குடிமகன் என்றும் இல்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே" (கலா 3:27-28) எனவே கிறிஸ்துவுடனும் ஒருவர் ஒருவருடனும் நாம் கொண்டுள்ள இத்திரு ஒன்றிப்பு இவ்வித்தில் அமைந்து அன்பியத்தில் மனித ரீதியாக இருகக் கூடிய வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் பிரிவினைகளையும் களைந்தெறிய நமக்கு ஓர் சவாலக அமைகின்றது.

## அன்பிய சேவையில் அருங்கொடைகள்

இத் திரு ஒன்றிப்பில் இணைந்தவர்கள் கிறிஸ்துவின் மறையுடலைக் கட்டியெழுப்பும் பணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். "நீங்களோ கிறிஸ்துவின் உடல், ஒவ்வொருவரும் ஓர் உறுப்பு" (1 கொரி 12:27) என்றும் மற்றோர் இடத்தில் "ஒவ்வொரு உறுப்பும் அதன் அலுவலுக்கு ஏற்ப செயற்படுவதால் இந்த மறை உடல் வளர்ச்சி பெற்று அன்பினால் கட்டடமாக எழுப்பப்படுகின்றது"(எபே 4:16) என்றும் கூறும் புனித சின்னப்பர், இப் புனித பணி இன்றியமையாததும் இயல்பானதுமானது என எமக்குச் சுட்டிக் காட்டுகின்றார். இதற்காக ஒவ்வொருவருக்கும் அருங்கொடைகள் பரிசுத்த ஆவியினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவை யாவும் பொது நன்மைக்காகவே சேவையின் (Diakonia) பொருட்டே அளிக்கப்பட்டுள்ளன என்பது அதே புனிதரின் போதனையாகும். (காண்க 1 கொரி 12:7, 14:3, எபே 4:11)

## எமது அன்பியங்களின் இன்றைய நிலை

புனித சின்னப்பர் மேற்படி காட்டிய வழியிலே திருச்சபையைக் கட்டியெழுப்ப எடுக்கப்படுகின்ற முயற்சியே எமது மறை மாவட்டத்திலே அன்பியங்களாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. அன்பியம் என்பது மேற்கூறப்பட்டது போன்று தோழமை, திரு ஒன்றிப்பு, பணி, பங்கேற்றல் என்பவற்றை உள்ளடக்கிய திருச்சபை வாழ்வாகும். கடந்த பல ஆண்டுகளாக இம்முயற்சியை நமது குருக்களும் அன்பிய இணைப்பாளர்களும் பங்கு ரீதியாக மேற்கொண்டு அரும்பாடு பட்டு வருகின்றனர். இவர்களை நன்றியுடன் பாராட்டுகின்றோம். இறைவன் தம் நல் ஊழியர்களுக்கு வளங்கும் வரங்களால் மேலும் இவர்களை நிரப்ப வேண்டும் என நாம் வேண்டி நிற்கின்றோம். அதே வேளையில் சில பங்குகளில் அன்பியச் செயற்பாடுகள் சோர்வுற்றிருப்பதை நாம் கவலையுடன் நோக்கக் கூடியதாய் உள்ளது.

"தன்னைப் புதுப்பித்துப் பகிரும் திருச்சபை" என்ற குறிக்கோளுடன் அன்பிய வாழ்வைத் தொடர்ந்து ஆழப்படுத்த இவ்வேளையில் நாம் அனைவரும் கைகோர்த்து முன்வரவேண்டும். இந்த நோக்கத்துடன் பொது நிலையினரின் உருவாக்கத்தை மையமாகக் கொண்டு வருகிற ஆண்டில் எமது மறை மாவட்டப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான திட்டங்கள் தை மாதத்தில் இடம்பெறும் மறை மாவட்ட மேய்ப்புப் பணி ஒன்றுகூடலில் வகுக்கப்படும். இதற்கு உதவியாக தற்போது உப கோட்ட ரீதியாகவும் பங்கு ரீதியாகவும் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன இவ் வேளையில் எமது மறை மாவட்டத்தில் உள்ள பங்குகளின் ஆன்மீக சமூக வாழ்வைச் சீர் தூக்கிப் பார்க்க பின்வரும் வினாக்களை உங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

## ஆன்மீக வாழ்வு

1) உங்கள் பங்குத் திருச்சபையானது அருட்சாதனங்களையும் வாழ்வுதயத்தினால் வழங்கப்படும் பொருளாதார நலன்களையும் வழங்கும் ஒரு நிறுவனமாக அமைந்து விடுவதில் இருந்து எவ்வளவு தூரம் கடந்து சென்றுள்ளது?
2) உங்கள் பங்கை அன்பியமாக உருவாக்க இவ்வாண்டில் எடுக்கப்பட்ட முயற்சிகள் எவை? இவற்றிற்கு மக்களின் ஒத்துழைப்பு எவ்வாறு அமைந்திருந்தது?
3) மக்கள் கிறிஸ்து இயேசுவில் தங்கள் வாழ்வைக் கண்டடைந்து வாழ்கின்றார்கள் என்பதற்கான அடையாளங்கள் பங்கில் தெரிகின்றனவா? அவை எவை?
4) அண்மைக் காலங்களிலே அருளினால் நிறைவாக்கப்பட்ட மனமாற்ற அனுபவங்கள் பங்கில் உண்டா? எப்படிப்பட்டவை?
5) இறை வார்த்தை மட்டில் உங்கள் பங்கு மக்கள் கொண்டுள்ள ஆர்வம், ஆவல் எவ்வளவிற்கு வளர்ந்துள்ளது?

## சமூக வாழ்வு

1) திருச்சபையின் வளர்ச்சியில் தாங்களும் கூட்டுப் பொறுப்பாளிகள் என்பதை மக்கள் உணர்ந்துள்ளார்களா?
2) ஏழைகள் கைவிடப்பட்டோர் மட்டில் உங்கள் பங்கு கொண்டுள்ள அக்கறை, எவ்விதத்தில் ஒன்றுபட்ட கிறிஸ்தவ பகிர்தலாக வெளிக் கொணரப் படுகின்றது?
3) பங்குத் தந்தையின் பிரசன்னமின்றி பொது நிலையினர் ஆழ்ந்த அர்ப்பணத்தோடு செய்துவரும் பொறுப்புக்களும் பணிகளும் எவை?
4) அநீதி, அபகரிப்பு, ஏற்றத்தாழ்வு, தன்னலம், மது, தீய ஒழுக்கம் போன்ற தீமையின் கோலங்களை எதிர்த்து உங்கள் பங்கில் எவ்வாறு நீங்கள் ஒன்றுபட்டு போராடுகின்றீர்கள

## புதிய மிலேனியத்தின் நம்பிக்கை கன்னிமரியாள்

ஆண்டவரின் நாள் வருமளவும் பயணமாகும் திருச்சபையைத் தாயன்போடு பேணிக்காத்து வரும் பரிசுத்த கன்னிமரியாள் இப் புதிய மிலேனியத்தின் தாயாகவும் நம்பிக்கையாகவுமுள்ளார்கள். கிறிஸ்துவை உலகிற்கு கொடுக்க இறைவனோடு சேர்ந்து ஒத்துழைத்த தாய் மரியாள் அவரின் மீறை உடலை கட்டியெழுப்பும் நமது புனித பணியிலே எமது பக்க பலமாக இருக்க அவரைப் பிள்ளைகளுக்குரிய பாசத்துடன் தொடர்ந்து நாடுவோம்.

*கிறிஸ்துவில் உங்கள் மேல் என்றும் பற்றுள்ள*

+ இரா. யோசேப்பு

*மன்னார், ஆயர்*

---

# மறைமாவட்டச் செய்திகள்

## மன்னார் மறை மாவட்டம் உதயமாகி 20 ஆண்டுகள் நிறைவு

யாழ் மறை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு உதயமாகிய மன்னார் மறை மாவட்டமானது பிறக்க இருக்கும் 2001 ஆம் ஆண்டு தனது இருபது வருடத்தை நிறைவு செய்கின்றது. இந்த முக்கியமான ஆண்டு நிறைவை மறை மாவட்ட விழாவாக தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி திருவிழாவின் போது கொண்டாட திட்டமிடப் படுகின்றது. இவ் விழாவை அர்த்தமுள்ள முறையில் ஆன்மீக ரீதியில் கொண்டாட மறை மாவட்ட மேய்ப்புப் பணி திட்டக் குழுவானது நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. கடந்த 20 ஆண்டு கால தூதுப் பணியையும் ஏனைய துறைகள் சார்ந்த செயற் பாடுகளையும் மீளாய்வு செய்யவும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைகின்றது.

### மடு மறைக் கோட்டத்தில் யூபிலி தியானம்

## போர் மேகங்கள் மத்தியில் ஆன்மீக மழை

கடந்த கார்த்திகை மாதம் மடு மறைக் கோட்டத்தில் உள்ள பண்டி விரிச்சான், தட்சனா மடு, விடத்தல் தீவு, தேவன் நகர் ஆகிய பங்குகளில் புதுப்பித்தல் தியானங்கள் இடம் பெற்றன. யூபிலித் தியானக் குழுவில் இடம்பெறும் 10 குருக்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து இத் தியானங்களை சிறப்பாக நடாத்தினர். யுத்தகால நெருக் கடிகளாலும் வறுமை வருத்தங்க ளினாலும் சொல்லொண்ணா துன்பத்திற குள்ளாகியுள்ள இவ்வன்னி மக்களுக்கு இத்தியானங்கள் ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருந்தன. விசுவாசப் புதிப்பித்தலுக்குரிய அரிய சந்தர்ப்பமாகவும் அமைந்திருந்தது. பல இறை மக்கள் கண்ணீரோடு தமது உள்ளக் குமுறல்களை செபங்களாக வெளியிட்டார்கள். பலர் பல ஆண்டுகளுக்குப் பின்னர் பாவ அறிக்கை செய்தனர்.

## "மன்னாரிலேயே அதிக இளம் குருக்கள்"

### குருக்களுக்கான தியானத்தின்போது சிலாப ஆயர் கருத்து

குருக்களுக்கான வருடாந்தத் தியானம் மார்கழி மாதம் இரண்டாவது வாரத்தில் ஆயர் இல்லத்தில் இடம் பெற்றது. சிலாபம் மறை மாவட்ட ஆயர் மேதகு பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் இத் தியானத்தை நெறிப்படுத்தினார். மறை மாவட்டத்தில் பணி புரியும் ஏறக் குறைய அனைத்துக் குருக்களும் இத் தியானத்தில் பங்கேற்று பயனடைந்தனர். தமது பணி வாழ்வுக்கான புதிய ஆன்மீக உந்துதலைப் பெற்றனர். தியானத்தின் முடிவில் சிலாப ஆயர் அவர்கள் உரையாற்றும் போது மற்றைய மறை மாவட்டங்களை விட மன்னார் மறை மாவட்டத்தில் அதிகமான இளம் குருக்கள் இருப்பதாகவும் அதற்காக கடவுளுக்கு நன்றி கூற வேண்டும் என்றும் கூறினார்.

### மறை மாவட்டக் கல்விப் பணிகளுக்கு பொறுப்பாக

## அருட் பணி டெஸ்மன்

மறைக் கல்வி நிலைய இயக்குனராகப் பணியாற்றும் அருட் பணி. டெஸ்மன் குலாஸ் அடிகளார் கல்வி தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பாக செயற்படுவார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

## மாந்தை திருவிழா

இவ்வருடம் இராணுவத்தினரால் பலவிதமான நெருக்கடி மிக்க கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டமையினால் மாந்தைத் திருவிழா இடம் பெறவில்லை என்பது அனைரும் அறிந்ததே. எனவே வரும் புதிய ஆண்டில் மாசி மாதத்தில் இத் திருவிழாவைக் கொணடாட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆயர் அவர்கள் சம்மந்தப் பட்டவர்களைப் பணித்துள்ளார். தள்ளாடி திருத்தலத்தையும் புனரமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுகின்றன.

## கல்வி கற்பிக்கும் குருக்கள்

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் குருக்கள் பாடசாலை நிர்வாகத்தில் பங்கேற்பதில்லை என்ற மறை மாவட்டக் கொள்கை இருந்தாலும், தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இந் நிர்வாகப் பொறுப்புக்களை வகிக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி சிந்திக்கலாம் என குருக்களின் மேலவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

### அகதிகள் பணி ஒன்று கூடலில்

## மன்னார் குருக்கள் பங்கேற்பு

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் நவரெட்னம் மற்றும் ஜெயபாலன் குரூஸ் ஆகியோர் கடந்த மாதம் கோடைக் கானலில் (இந்தியா) 12.11.2000 தொடக்கம் 15.11.2000 வரை நடைபெற்ற தெற்காசிய யேசுசபை அகதிகள் பணி(J R S) குழுவினரின் ஒன்று கூடல் நிகழ்வில் பங்கேற்றனர். இவ்விரு குருக்களும் இயேசு சபைக் குருக்களின் அகதிகள் பணிக்குழுவினரோடு மன்னார் மறைமாவட்டம் சார்பாக இணைந்து செயலாற்றுவது குறிப்பிடத்தக்கது.

### பீடப்பணியாளர் நாடகப் போட்டி

## பத்துப் பங்குகள் உற்சாகமாகப் பங்கேற்பு

கடந்த 19.12.2000 அன்று மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம் பெற்ற பீடப் பணியாளர்களுக்கான நாடகப் போட்டியில் மறை மாவட்டத்தில் உள்ள பத்துப் பங்குகளைச் சார்ந்த பீடப் பணியாளர்கள் உற்சாகமாகப் பங்கேற்றனர். தலைமன்னார், பேசாலை, தோட்டவெளி, வங்காலை, முருங்கன், அரிப்பு, கற்கிடந்தகுளம், நானாட்டான், பம்பைமடு, விடத்தல்தீவு ஆகிய பங்குகளைச் சார்ந்த பீடப்பணியாளர்கள் பங்கெடுத்தனர். இந் நாடகங்கள் வீடியோ படமாக்கப்பட்டு பங்குகளுக்கு காண்பிக்கப்படும் என்றும் பங்கு மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் இப்போட்டியை ஒழுங்கு படுத்திய மறைக்கல்வி இயக்குநர் டெஸ்மன் அடிகளார் தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாட்டில் சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தவும் சமாதானத்துக்காகச் செபிக்கவும்,

**மடுத்திருப்பதியின் கடந்த 450 வருட கால வரலாற்றில் முதல் தடவையாக**

# மடு அன்னையின் திருச் சுருபம் தென்பகுதியில் பவனி

மடுத்திருப்பதியின் கடந்த 450 வருட கால வரலாற்றில் முதல் தடவையாக மடு அன்னையின் திருச் சுருபம் இலங்கையின் தென் பகுதிக்கு எடுத்து செல்லப்பட இருக்கிறது. அண்மையில் நடைபெற்ற கத்தோலிக்க ஆயர் பேரவையின் கூட்டத்தின்போது நாட்டில் சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தும் முகமாகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த திருயாத்திரை நிகழ்வுகள் 2001 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் இடம்பெறும். இது தொடர்பாக ஆயர் பேரவையின் செயலாளர் ஆயர் மல்கம் றஞ்சித் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் "தொடக்க காலம் முதலே கத்தோலிக்க சமூகம் மடு அன்னையின்பால் அதிக பக்தியும் வணக்கமும் கொண்டுள்ளது. இப்பதியில்தான் தமிழ் சிங்கள மக்கள் சகோதரத்துவத்துடன் ஒன்றாக இணைந்து செபித்துவந்தனர். மடு அன்னை மக்களிடையே நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவார் என்பது ஆயர்களின் நம்பிக்கையாகும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின்படி சமாதானத்திற்கான செபத்தை ஊக்குவிக்கும் முகமாக மடு அன்னையின் திருச்சுருபம் சிலாபம், கொழும்பு குருநாகல், அநுராதபுரம் ஆகிய மறைமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் மடு அன்னை பவனி வரும் பாதை எங்கும் செப வழிபாடுகளும் சமாதானப் பேரணிகளும் நடாத்தப்படும். ஏனைய இடங்களில் உள்ள யாத்திரிகளுக்காக கொழும்பில் ஒரு நாள் செப வழிபாடு நடாத்தப்படும். இந்நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் குழுவில் கொழும்பு பேராயர் மன்னார் ஆயர் மற்றும் சிலாப ஆயர் ஆகியோர் இடம் பெறுகின்றனர். சமாதான நிகழ்வுகளுக்கு தொடர்பாளராக ஆயர் மல்கம் றஞ்சித் அவர்கள் செயற்படுவார்.

### உலக இளைஞர் பெருவிழாவில் கலந்து கொண்டவர்களுள்

## 5000 பேர் துறவறத்தை ஏற்றுக் கொள்கின்றனர்

உரோமையில் நடைபெற்ற உலக இளைஞர் பெருவிழாவில் கலந்துகொண்டவர்களுள் மூவாயிரம் பேர் குருமடத்தில் சேரப் போகின்றனர். உலக இளைஞர் பெருவிழாவையொட்டி நடைபெற்ற இறை அழைத்தல் முகாமில் கலந்து கொண்டவர்களுள் இரண்டாயிரம் இளம் பெண்களும் கன்னியர் மடத்தில் சேரப் போவதாக தெரிவித்துள்ளனர்.

## "முதியோரின் சேவை சமுதாயத்திற்குத் தேவை"

- திருத்தந்தை

சமுதாயத்திற்கு முதியோரின் சேவை தேவைப்படுகின்றது என்று திருத்தந்தை நினைவூட்டினார் "திருச்சபைக்கு இனிமேலும் நீங்கள் தேவைப்படுகிறீர்கள், நாம் தேவைப்படுகிறோம்" என்று மாபெரும் ஜூபிலி ஆண்டில் வத்திக்கானுக்கு திருப்பயணம் மேற்கொண்ட முதியோரிடம் திருத்தந்தை பேதுரு பேராலய வளாகத்தில ஆற்றிய உரையில் குறிப்பிட்டார். "வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் நாம் பல அனுபவங்களைப் பெறுகிறோம், அனுபவ முதிர்ச்சி அடைகிறோம், நமது அனுபவம் மற்றவர்களுக்கு உதவ வேண்டும்" என்று திருத்தந்தை திருப்பலியில் ஆற்றிய மறையுரையின்போது வலியுறுத்தினார்.

## கொழும்பு மறைமாவட்டத்திற்கு புதிய துணை ஆயர்

கொழும்பு மறைமாவட்டத்தில் அதிகரித்து வரும் பணிகளைக் கருத்தில் கொண்டு பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகையின் வேண்டுகோளுக்கு இணங்க வத்திக்கான் திருப்பேராயம் புதிய துணை ஆயரை நியமிக்க முன் வந்துள்ளது. கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியின் தற்போதைய அதிபர் அருள்திரு மேரியஸ் பீரிஸ் அவர்களே கொழுமபு துணை ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார். பேராதனை பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் இறையியலில் பல கல்வித் தகமைகளைக் கொண்டுள்ளார். கொழும்பு மறைமாவட்டத்தில் மறைக் கோட்ட முதல்வராக இரு தடவைகள் பணியாற்றியுள்ளார். 1994ஆம் ஆண்டு தொடக்கம் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.

## ஆயர்கள் - கத்தோலிக்க எம். பி. க்கள் சந்திப்பு

இனப்பிரச்சினைச் தீர்வுக்கு சமாதான பேச்சுவார்த்தைகள் மற்றும் பல்வேறு விடயங்கள் தொபர்பாக 14 ஆயர்கள் கத்தோலிக்க எம். பி. க்களைச் சந்தித்து கருத்துக்கள் பரிமாறியுள்ளனர். இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கத்தோலிக்க எம். பி.க் களை ஆயர்கள் வலியுறுத்தியுள்ளனர். சமாதான தீர்வு ஏற்படுவதற்கு இப்போது நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும் இந்நேரத்தில் பொறுப்புடன் நடந்து முழு ஆதரவளிக்குமாறும் ஆயர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை வலியுறுத்தியுள்ளனர்.

## "செயலில் இறங்க வேண்டிய நேரம் வந்து விட்டது."

-ஆயர் கிங்ஸ்லி

"இவ்வளவு காலமும் சமாதானம் பற்றிப் பேசப்பட்டு வந்தது. இப்போது சமாதானத்தைக் காண்பதற்கு செயல்லி இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது." இவ்வாறு திருமலை- மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தெரிவித்தார். திருகோணமலை சென் ஜோசப் கல்லூரியில் அண்மையில் அனைத்து இன மொழி மதங்களைச் சேர்ந்த மாணவர்கள் நத்தாரை ஒட்டி நடத்திய "நத்தார் தினம் 2000" நிகழ்வுக்கு அனுப்பிய ஆசிச் செய்தியிலேயே ஆயர் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## "சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளை தமிழர் பிரதேசங்களுக்கு இடம் மாற்றுக"

**மன்னார் ஆயர் ஜனாதிபதியிடம் கோரிக்கை**

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் இடம் பெற்ற காட்டு மிராண்டித் தனமான கைதிகள படு கொலையைத் தொடர்ந்து சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்தவும் அக் கைதிகளை தமிழ்ப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யுமாறும் மன்னார் ஆயர் அவர்கள் ஜனாதிபதியிடம் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார். ஜனாதிபதிக்கு ஆயர் அவர்கள் எழுதிய கடிதத்தில், "பண்டாரவளையில் நடந்தேறிய காட்டுமிராண்டிச் சம்பவமானது தமிழ்க் கைதிகளுக்கு சிறைச் சாலைகளில் எந்தப் பாதுகாப்பும் இல்லை என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாதவாறு நிரூபித்துள்ளது. சட்டத்தின் பாதுகாவலர்களே இந்த மனித இனத்திற்கு எதிரான இக் காட்டு மிராண்டித் தனமான படுகொலைக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு பட்டிருக்கின்றார்கள் என்பதை வெட்கத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே தமிழ்பேசும் அரசியல் கைதிகளை இப்போது இருக்கும் அதே சிறைச் சாலைகளில் வைத்திருக்க வேண்டாம் என்றும் அக் கைதிகளை தமிழர் வாழும் பிரதேசங்களுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றேன். சந்தேக நபர்களை எந்த விதமான நீதி விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாகத் தடுத்து வைத்திருப்பது எவ்வளவு அநீதியானது என்பதை இவ் வேளையில் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். எனவே, சந்தேகத்துக்குரிய அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக நீதிக்கு முன் கொண்டு வரவும் அவர்களுக்கு நீதி வழங்கவும் ஆவன செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறேன்" என மேலும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## மேரி பஸ்ரியன் அடிகளாரின்

### 17 ஆவது ஆண்டு நிறைவு

**அன்னை மடியில 11.11.1948**



**ஆண்டவன் அடியில் 06.01.1984**

*மக்களுக்காக வாழ்ந்து பணி செய்து தான் நேசித்த மக்களுக்காகவே தன்னைக் கரைத்துக் கொண்டவர் பஸ்ரியன் அடிகளார். யாழ்ப்பாணம், இளவாலையைச் சார்ந்த இவர் மன்னார் மறை மாவட்டத்தில் வங்காலைப் பங்கில் பணி செய்யும் போது இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டதன் 17 ஆவது ஆண்டு நிறைவு 06.01.2001 ஆகும். அன்னாருக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர், குருக்கள், இறைமக்கள் சார்பாக மன்னா அஞ்சலியைத் தெரிவித்து நிற்கிறது.*

*இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் ஒரு அருட் சகோதரிக்கு எழுதிய கிறிஸ்மஸ் வாழ்த்து மடலில் அவர் எழுதிய வார்த்தைகள்*

இனி நான் வாழப்போவதோ கொஞ்சக் காலம். வாழும்வரை சேவை செய்ய வேண்டும் என்பதே என் விருப்பம். ஜெயராஜசிங்கத்துக்கு நடந்ததே எனக்கும் நடக்கலாம். அவருடைய சாம்பலாவது கிடைத்தது. என்னுடைய உடலை என்ன செய்வார்களோ தெரியாது. என்னுடைய சாம்பல் தானும் கிடைப்பது சந்தேகம். புனித செபஸ்தியாரும் இளம் வயதிலேதான் மரணமடைந்தார். அவர் பெயர் கொண்ட எனக்கும் அப்படிப்பட்ட மரணம்தான் ஏற்படும்" - Fr.பஸ்ரியன்-

## மன்னாரில் இரண்டு முதுபெரும் ஆசிரியர்களின் மறைவு

கடந்த கார்த்திகை மாதம் மன்னாரின் இரண்டு இளைப்பாறிய முதுபெரும் ஆசிரியர்கள் இறைபதமடைந்தனர். ஒருவர் இளைப்பாறிய அதிபர் இராயப்பு ஜேம்ஸ் யோசவ். மற்றவர் இளைப்பாறிய ஆசிரியை திருமதி பூமணி யோசவ். இவ்விருவருக்கும் மன்னாவின் ஆழ்ந்த அனுதாபங்கள்

### இளைப்பாறிய அதிபர் இராயப்பு ஜேம்ஸ் யோசவ்

மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இராயப்பு ஜேம்ஸ் யோசவ் அவர்கள் 12.11.2000 அன்று மன்னாரில் இறைபதமடைந்தார். இவர் யோசவ் மாஸ்ரர் என்று அனைவராலும் அறியப்பட்டவர். 27.07.1920 ல் பிறந்த இவர் மன்னார் மாவட்டத்தின் பல இடங்களில் சிறப்பான கல்விப் பணி ஆற்றியுள்ளார். அதுமட்டுமன்றி தம் வாழ்நாளில் திருமறைப் பணி புரிவதிலும் தம் நேரத்தை செலவிட்டுள்ளார். புனித செபஸ்ரியார் பேராலயத்தின் பங்குச் சபைத்தலைவராக பணியாற்றியுள்ளார். சிலுவைப்பாடு காட்சிகளைப் பழக்குவதிலும் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான ஞான ஒடுக்கங்களை ஒழுங்குபடுத்துவதிலும் இவருடைய பணி குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது.

இவர் ஆற்றல் மிக்க ஆசானாக அனைவராலும் அறியப்பட்டவர். எளிமையான சுபாவமும் எல்லோருடனும் இனிமையாகப் பழகும் குணமும் உள்ளவர். குடும்பத்தினருக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் நல்வழி காட்டுபவர். அயலின் நல்ல நண்பர். ஆபத்தில் கைகொடுக்க ஓடோடி வருபவர். இத்தகைய சிறப்புக்கள் வாய்க்கப்பெற்ற ஒரு மாமனிதனின் மறைவு மன்னார் மண்ணுக்கும் கத்தோலிக்க சமூகத்திற்கும் ஒரு பேரிழப்பாகும்.

### இளைப்பாறிய ஆசிரியை திருமதி பூமணி யோசவ்

மன்னாரைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி பூமணி யோசவ் அவர்கள் 25.11.2000 அன்று மன்னாரில் இறைபதமடைந்தார். இவர் பூமணி ரீச்சர் என்று அனைவராலும் அறியப்பட்டவர். 22.01.1932ல் பிறந்த இவர் தனது 38 வருட ஆசிரிய பணியில் 28 வருடங்கள் மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் தனது கல்விப் பணியை ஆற்றியுள்ளார். இவரே அக் கல்லூரியின் முதல் பெண் ஆசிரியராவார். மறைக்கல்விப் பணியில் சிறப்பான ஈடுபாடு காட்டி பணிபுரிந்துள்ளார். தனது தள்ளாத வயதிலும் சுகவீனத்தின் மத்தியிலும் ஞாயிறு திருப்பலியில் பங்கெடுக்க வேண்டும் என்பதில் இவர் காட்டிய ஆர்வம் இவரது விசுவாச வாழ்வுக்கு சிறந்த சாட்சியாகும். இவரது மறைவும் மன்னார் மண்ணிற்கு பெரும் இழப்பாகும்.

### மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ், மரியன்னை பேராலயத்தில்

## விசேட வழிபாடு

மனித உரிமைகள் தினமான 10.12.2000 அன்று யாழ். குடாநாட்டில் சமாதான பேரணி நடாத்த படையினர் அனுமதி அளிக்காததால் யாழ். மரியன்னை பேராலயத்தில் விசேட வழிபாடு நடாத்தப்பட்டது. இந்த பேரணியை நடாத்துவதற்கான அனுமதியை யாழ் மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்திற்குமான அமைப்பு முதலில் யாழ் பொலிஸ் நிலையத்தில் பெற்றிருந்தபோதிலும் பின்னர் இதற்கான அனுமதியை படையினர் மறுத்து விட்டனர். இதனையடுத்து இத்தினத்தை முன்னிட்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன. இதில் பெருமளவு பொதுமக்களும் அருட்தந்தையாகள், அருட்சகோதரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## கிறிஸ்து பிறந்த கிறிஸ்மஸ் விழா

அருட்திரு.அ.ம. ஸ்ரீபன். செ.தா.
இலங்கை மாகாண அதிபர்,
செபமாலை தாசர் சபை.

மாபரன் யேசு பிறந்த மாபெரும் மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சியை டிசம்பர் (மார்கழி) மாதத்தில் அகில உலகமும் ஆர்ப்பரித்துக் கொண்டாடுகின்றது. புத்தாடைகளும் புதுப்பொலிவும், சோடினைகளும் பரிசுப்பொருட்களும், வாழ்த்துக்கள் அனுப்புவதும் உணவுகள் பரிமாறுவதும், ஆலயங்களில் திருப்பலிகள் ஒப்புக்கொடுப்பதும் ஆண்டவர் யேசுவை ஆராதிப்பதும் வழக்கமான நிகழ்ச்சிகளாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந் நன் நாளில் நம் நாட்டு மக்கள் அனைவருக்குமே விண்மண் வேந்தன் யேசு பிறந்த மகிழ்ச்சி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வழக்கமான, மேலெழுந்த வாரியான நிகழ்ச்சிகளோடு சென்று முடிந்து விடுவது அல்ல கிறிஸ்து பிறப்பு விழா. ஆனால் மனித வாழ்வின் ஆழமான உண்மை நிலையைப் பிழிந்து காட்டி, மாசுற்று மடிந்து போகும் மனித மாண்புக்கு புத்துயிர் கொடுத்து, உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனித உயிருக்கும், மாண்பான வாழ்வு உண்டு என்ற மகிழ்ச்சி செய்தியை கொண்டு வருவதுதான் கிறிஸ்து பிறந்த கிறிஸ்மஸ் விழா.

அன்பே மனிதம் உண்மையே அதன் மையம். நீதியே அதன் நிறைவு. சகோதரத்துவமே அதன் உண்மை இயல்பு இதை உணர்ந்து வாழ்ந்தால்தான் அவன் முழு மனிதன் ஆக முடியும். இவ்வாறாக வாழ்ந்த மாமனிதன்தான் ஏனையோரை வாழவைக்கும் மனித தெய்வம் யேசு. அவர் தரையைத் தொட்ட வானம். தெய்வமாய் உயர்ந்த மனிதன். மனிதனில் மலர்ந்த தெய்வம். இன்று தொலைத்தொடர்பு சாதனங்களிலே செய்தி ஊடகங்கள் பெருகி பங்காற்றுகின்றன நாளாந்தம் செய்தி கேட்க வேண்டும் என்று ஆவலோடு இருக்கின்றோம். ஆனால் நமக்கு கிடைக்கும் உலக நாடுகளின் செய்திகள் எல்லாம் நமக்குக் கொண்டு வருவது கொலைகள், கொள்ளைகள், போர்கள், அழிவுகள், இவைகளுக்காகத் தீட்டும் திட்டங்கள், சமுதாய சீர் குலைவுகள் போன்றவையே. இவைகள் மனிதர் தம் மனங்களை சோகத்தில் ஆழ்த்தி வாழ்வை துக்க சாகரத்தில் மூழ்கடிக்கிறன.

உலகிலே ஒலிக்கப்பட்ட செய்திகளில் ஒரேயொரு செய்தி மட்டும் "மக்களுக் கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் மாபெரும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று தலைப்பிட்டுக் கூறப்பட்டது. இச்செய்திதான் "இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா. குழந்தை ஒன்றை துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அறிகுறியாகும்" என்று விண்தூதர் இயைர்களுக்கு அறிவித்த செய்தியாகும். இயேசு பிறந்த இந்த மாபெரும் நற்செய்தி கடந்த 2000 ஆண்டுகளாக எங்கும் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. இதுதான் உலக வரலாற்றில் தொடர்கதையாக வந்து கொண்டிருக்கும் பல்வேறு மனித பிரச்சினைகள். பிளவுகள், துன்பங்கள் இவைகளில் துவண்டு விழும் மனுக்குலத்துக்கு புதுவாழ்வு கொடுக்கும் நற்செய்தியாக நின்று மனுக்குலத்தை வாழவைக்கின்றது. கிறிஸ்து பிறப்பு நற்செய்தி இடையருக்கு அறிவிக்கப்பட்டபோது விண்ணொளி அவர்களைச் சூழ்ந்து சுடர்ந்தது. நாமும் இந்த நற்செய்தியைக் கேட்கும்போது நம்மை, நமது துன்ப இருள் படர்ந்த மனங்களை, இழப்புக்களால் இருள் படர்ந்த நமது நாட்டை விண்ணொளி சூழ்ந்து சுடர்கின்றது. இதன் பலன் அமைதி, சமாதானம்.



இந்த கிறிஸ்து பிறப்பு நற்செய்தி முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. ஏனெனில் அவர்கள் ஏழைகள், எளிய மனம் படைத்தோர், தாழ்மை உடையோர், தமது கடமைகளில் கண்ணாயிருப்போர், நீதி நேர்மை உடையோர், தமது நாளாந்த தேவைகளுக்கு உழைப்போர், மற்றவர்களை எவ்வகையிலும் துன்புறுத்தாதோர், இத்தகைய மனித மாண்புகளை மேன்மைப்படுத்தும் வாழ்வை வாழ்வோருக்குத்தான் இறைவனின் நற்செய்தி முதலில் அறிவிக்கப்படுகின்றது. நமது நாடு அழகிய, இயற்கைவளம்மிகுந்த, ஞான சிந்தனைகளிலும், அறிவு வளர்ச்சியிலும் சிறந்த, கலை கலாச்சாரங்களில் கனிந்த நாடு. அமைதிப் பூங்காவாக இருந்து அனைத்து நாடுகளுக்கும் ஆறுதல் கொடுக்க வேண்டிய நாடு. அனைத்துலகிற்கும் மாபெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் நற்செய்தி நமது நாட்டுக்குக் கூறுவது என்ன? ஒரு கருத்தாழமிக்க கதை ஒன்றுண்டு. ஒரு கிராமத்துக்கு கடவுள் வந்தார். அவரது தோற்றத்தைக் கண்ட சிறுவர்கள் கேலிசெய்தனர். வாலிபர்கள் கல்லால் எறிந்தனர். பெரியவர்கள் ஒன்றாய்க் கூடி கூட்டம் வைத்து அவரைக் கிராமத்திலிருந்து வெலக்கி வைத்தனர். மறு நாள் அக்கிராமத்துக்கு வழிப்போக்கர் வந்தார் கைத்தடி ஒன்றைக் காட்டி "இது கடவுளின கைத்தடி, அதிசயமானது, அற்புதமானது, அண்டசராசரங்களைப் படைக்க வல்லது என்றார். அனைவரும் விழுந்து விழுந்து அதை வணங்கத் தொடங்கினர். பெரிய கோவில் ஒன்று எழுப்பி அந்தக் கைத்தடிக்கு பூஜை, ஆராதனை நடப்பதாகவும், திருயாத்திரிகர்கள் ஏராளமாக வந்து குவிந்ததாகவும் கூறப்படுகிறது.

இன்று நமது சூழல் இதுதானா? சாதி, சமயம், இனம், மொழி போன்ற பிளவுகளாலும், அகதிகள், அனாதைகள், ஏழைகள், விதவைகள், இடம் பெயர்ந்தோர், போர் முனைகளில் பூரையோடி நிற்போர், அங்கங்களை இழந்து அல்லுறுவோர், வாழ்விலே வழி அறியாது வாடி வதங்குவோர், காடுகளில், கடற்கரை ஓரங்களில் கண்ணீரால் தம் வாழ்க்கையைக் கரைத்துக் கொண்டிருப்போர், சிறைக்கூடங்களில் சித்திர வதைப்படுவோர் என்று இறைவனின் சாயலாகிய மனிதரை ஒதுக்கி வைத்து விட்டு அவர்களை அழிக்கும் ஆயுத சக்திகளுக்கு ஆராதனை செலுத்துகிறோமா?

கிறிஸ்து பிறப்பு நமக்குக் கூறும் மாபெரும் மகிழ்ச்சி தரும் நற்செய்தி என்னவென்றால் மனிதர்கள் ஒவ்வொருவரையும் தெய்வமாகக் கருதி அன்பு செய்ய வேண்டும், இந்த அன்பு எவ்வித பாகுபாடும் இன்றி பகிர்ந்தளிக்கப்படவேண்டும்,

இந்த அன்பை அறிவிக்கவே கிறிஸ்து தெய்வீகத்தன்மையைக் களைந்துவிட்டு மனித உருவில்த் தோன்றி அனைவரும் தன்னை அணுகும் வண்ணம் ஏழையிலும் ஏழையானார். நாம் ஒவ்வொரு மனிதருக்கும் செய்யும் ஒவ்வொரு உதவியும் நீ எனக்கே செய்கின்றாய் என்று அன்புச் செயலுக்கு தெய்வீகத் தன்மை கொடுக்கிறார் இயேசு.

ஆகவே எமது நேரத்தை. அன்பு மொழிகளை, அறிவை, பொருளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது, இல்லாதோர், இயலாதோர் மாபெரும் மகிழ்ச்சி அடைகின்றனர். நமது உள்ளமும் அமைதி அடைகிறது. இது நாடு முழுவதும் விரியும்போது நாடு அமைதி, சமாதானம் காண்கிறது. இதுதான் மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி.

# கிறிஸ்மஸ் கவிதைகள்

### எம்மை மீட்கப் பிறந்த பாலன்

மாடடைத் தொழுவத்திலே
மானிடரை மீட்க
மனிதனாய்ப் பிறந்த
மரியின் மைந்தா

பாவிகள் எம்மை மீட்க
பாரினிலே அவதரித்து
மைந்தர் எம் அனைவருக்கும்
மாட்சி அளித்தீரே

நடுங்கும் குளிரினிலே
நடுநிசி வேளையிலே
துன்ப இவ்வுலகில்
தூயவனாய்ப் பிறந்தீரே

ஏழ்மையின் வடிவினிலே
ஏழைகளை மீட்டிடவே
மனுவுருவாய்ப் பிறந்தவரே
மானிடர் நாம் உம்மைப்
மகிழ்வோடு போற்றுகின்றோம்

பீ.நிரஞ்சினி குரூஸ்
கன்னியர் மடம், மன்னார்

### மீட்பு என்றும் உண்டு

மண்ணுயிரின் வேதனையைக்
கண்ணோக்கி
விண்ணக வேந்தன் கருணையினால்
தன்னருந்குமாரனால் எமை மீட்க
தயையுடன் யேசுவை உவந்தளித்தார்.
பத்தரை மாற்றும் முத்திரையாய்
புற்களை மீது பனித்துளியாய்
விழவுக்கும் வெளிச்சமாய்
உருவெடுத்தார் உலக மைந்தன்.
ஆதாம் பிறந்து பழி தந்தான்
ஆண்டவன் பிறந்து வழி தந்தான்
ஆதவன் நீக்கும் புறவிருளும்
ஆண்டகை நீக்கும் அகவிருளும்
அவனியில் மனிதன்
அறிந்து கொண்டால்
அவனுக்கு மீட்பு என்றும் உண்டு

மரிய ஜெகோவா (காஞ்சனா)
நெடுந்தீவு

### மலரட்டும் மகிந்தன்

வருக இறையே வருக
உமது பாசமிக்க மனித உயிரைப் பார்க்க.
வாழ்வளிக்கும் வார்த்தையெல்லாம்
உம்மிடம்தான் - ஆனால்
உயிரெடுக்கும் உயிர்க்கொல்லிகள்
எம்மிடம்தான்.

உமது வாசமிக்க மனித மலர்கள்
உதிர்ந்தனதான் பண்டாரவளையில்.
உமது சிந்தனைக்கு எதிராய்
தோன்றியதுதான்
அரசு உத்திகள்.

அது மட்டுமா?
நீர் விட்டுச் சென்ற அன்பு என்னும்
ஆழ்கடல்தான்
எம் மண்ணில் அது
பாழ் கடல்தான்.

அது புரிந்திருக்கும் உமக்கு
பண்டாரவளையில் தான்.

இன்னும் கொஞ்சம் சொல்வேனாகில் -
மனித மாண்பு மறுக்கப்பட்டு
மனித வேட்டை தலை தூக்கி
தாண்டவமாட
மானிடம்தான் மாண்டு போகிறது.

இதைக் கண்டு மனம் மகிழும்
கொடிய உள்ளம் மலர்ந்துதான் கிடக்கிறது.

எனவேதான்
வருக இறையே வருக
மணம் வீசும் மலர் கொண்டு
வருக

அ.தேகன் சில்வா
முள்ளிக்குளம்



### மீட்பர் வருகின்றார்



வண்ண மாளிகை இருக்கவில்லை
வைக்கோல் குடிசையே
வர்ண ஆடைகள் அணியவில்லை
வெண்ணிறப் போர்வையைத் தவிர
வேற்றாடையில்லை
எண்ணத்தில் எளியவராய்
உள்ளத்தில் உயர்ந்தவராய்
உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை
என வானதூதர் இசைக்க
இடையர்கள் வந்து வணங்க
பாவிகள் எம்மை வைகறையில் இருந்து மீட்க
பாலகன் உதித்தார் இம் மண்ணில்

அமைதி இன்றி அகதிகளாய்
அலைந்து திரியும் எம் இனத்திற்காய்
அமைதியைப் பொழிந்திட
அவனியில் அண்ணல் இயேசு
மண்ணில் உதித்தார்
விண்ணிலிருந்து மண்ணில் மலர்ந்த
மங்கா மாணிக்கத்தை போற்றிப் புகழ்வோம்
ஏற்றுத் துதிப்போம் இயேசு பாலகனை

அமலராணி (நெலு) 11 ஆம் வட்டாரம்
நெடுந்தீவு

### இயேசு பாலன்

வானவர் வணங்கும் தூயநல் அமுதாய்
வையகத்தோர் வாழ்வின் வழித்துணையை
அன்பு என்னும் அகல் விளக்கேற்றி
அவனியில் மனிதனாய் பிறந்தார்.

வானத்தில் ஆயிரம் மின்மினிப் பூக்கள்
வாழ்த்துக்கள் கூறி கண்சிமிட்ட
செந்தமிழின் சுவையாய் தேமதுரக் கனியாய்
செங்கதிராய் குடிலில் பிறந்தார்

குயிலதன் இனிய குரலெடுத்துப் பாட
குழலுடன் யாழெடுத்து இசை முழங்க
வெண்பனி இரவில் வெண்ணிற ஒளியில்
பிறந்தார் மண்ணுக்கோர் மைந்தனாய்

செ. மேரி ஜெனீத்தா (ஜொக்சி)
மாளிகைத்திடல், அடம்பன்

### பாலகனாய் பிறந்து வா

சமாதானம் தொலைந்து விட்ட
எம் மீழ மண்ணதனில்
சமாதானப் பூவாய் மலர்ந்திட நீ
பாலகனாய் பிறந்து வா.

செங்குருதி ஆறாய் ஓடுகின்ற
எம்மினிய பூமிதனிலே
அமைதி என்னும் அருள் ஊற்று
ஆறாய் பெருகிட பாலகனாய் விரைந்து வா

செல் வந்து செல்வம் எல்லாம்
சீரழிந்து சிதறுகின்ற எம் வாழ்லில்
அருள் செல்வம் பொழிந்து அ
அருள் ஒளி வீசி நீ பாலகனாய் வா.

கையிழந்து காலிழந்து முடமாகி
ஊனர்களாய், அகதிகளாய் மக்களெல்லாம்
முடிவாகிப் போகு முன்னே தொடர்கின்ற
யுத்தத்தை தொலைத்திட பாலகனாய் வா.

எமை ஆளும் ஆட்சியாளர் உள்ளத்திலே
மனிதனை மனிதனாய் மதிக்கும்
மாண்பு என்னும் வேட்கைதனை
மலர்ந்திடச் செய்திட பாலகனாய் நீ வா.

இறைவேதம் போதிக்கும் இறை பணியாளர்
எல்லோரும் அன்பியமாய் வாழ
உழைக்கின்ற, இறை அடியாராய்த் திகழ
வைக்கும், பாலகனாய் நீ வா

யூபிலி ஆண்டிதனில் மனமாற்ற
முழக்கமிட்டு நற்செய்தி அறிவிக்கும்
அருள் பொழிய அண்ணலே யேசு
பாலகனாய் நீ பிறந்து வா.

S. சிவசித்தா,
மறைத்தொண்டர், கள்ளியடி.

கிறிஸ்மஸ் கவிதைகள்
கிறிஸ்மஸ் கவிதைகள்

எல்லா மக்களுக்கும் பெரு மகிழ்ச்சி!ட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன் (லூக். 2:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## மீட்பளிக்கும் மகிழ்ச்சி

காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது. (எசாயா 9:2) அன்று சமூகத்தில் இடை வெளி நிலவியது. தனிமனிதன் தன்னிலே நிறைவு காணாமல் பெரும் வெறுமையை அனுபவித்தான். மனிதனும் மனிதனும் ஒன்று சேரா நிலையில் மனிதன் மனிதனை எதிரியாக எதிர் கொண்டான். மனிதன் இறைவனிடம் கொண்டிருந்த பக்தியையும் பிரித்து அமைதியை இழந்து அந்தரித்தான், அலைக்களிக்கப்பட்டான். இந்நிலையில் மனிதனுக்கு விடுதலையை மகிழ்ச்சியினைக் கொடுக்க அன்பின் சுவையை அனுபவ ரீதிதயாகப் பெற்று இன்புற உறவின் இறைவன் வரலாற்றிலே எதிர்கொள்ள விரும்பினார். இறைமகன் கிறிஸ்து மனிதனாக அவதரித்தார். அவர் வறியவர்கள் பிணியகற்றி செல்வர்களின் செருக்கொடுக்கி உள்ளமதில் இருளொழித்து பரந்து விரிந்த நல்மணம் வளர்த்து ஒற்றுமையின் ஒளியேற்றி நற்பயனளித்திட மீட்பனாய் அவதரித்தார்.

பாவத்தினால் இறைவனிடமிருந்து அந்நியமாக்கப்பட்ட மனிதன் மீண்டும் இறைவனோடு சங்கமமாகும் சம்பவமாக கிறிஸ்து பிறப்பு அமைகின்றது. ஆம் கிறிஸ்து பிறப்பு உள்ளத்திலே உவப்பினை உலகிலே அமைதியினை உறவிலே நிறைவினை பகிர்விலே திருப்பதியை வெளிப்படுத்துகின்ற ஒரு வரலாற்று மகிழ்ச்சி நிகழ்ச்சியாக அமைகின்றது.

எந்தவொரு மனிதனும் தனிமையிலே இனிமை காண முடியாது. இரட்சணியம் அடைய முடியாது. அதாவது மனிதன் ஏனைய மனிதர்களிடம் இருந்து பிரிக்கப்பட்ட, அந்நியப்பட்ட நிலையிலே, இறையுறவிலிருந்து விலக்கப்பட்ட நிலையிலே அவன் மீட்பினை எய்த முடியாது. அவன் தன்னிலே அமைதி காண வேண்டும். ஏனைய மனிதர்களோடு நல்லுறவு கொள்ள வேண்டும். இறைவனோடும் இணைய வேண்டும். அப்பொழுதுதான் அவன் விடுதலைக் காற்றினை மகிழ்வாகச் சுவாசிக்க முடியும். இந்த அன்பின், விடுதலையின், மகிழ்ச்சியின் இரகசியத்தைச் சுமந்து வரும் தென்றலாகத்தான் இறைமகன் கிறிஸ்து மண்ணிலே மனுவானார். இதைத்தான் மார்கழிக் கடும் குளிரிலே கொண்டாடுகின்றோம்.

வரலாற்றில் இஸ்ராயேலர் மீட்பருகாக காத்திருந்தார்கள். மீட்பர் இஸ்ராயேலரிடம் வந்து உலாவினார். ஆனால் அவர்கள் மீட்பரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கின்றார். (அரு. 1:2) அப்பொழுது கானகத்திலே குரலொன்று எழுந்து மீட்பருக்கு சாட்சி கூறியது. "இதோ கடவுளுடைய செம்மறி, இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர்" அரு 1:29 என்று அக்குரல் மீட்பரை சுட்டிக்காட்டியது.


மீட்பின் வழி இதுதான் என்று ஆணித்தரமாக அகத்திலிருந்து எழுந்த ஒரு அதிகாரத்துடன் எடுத்துரைத்தார். மீட்பராக வந்த இயேசுவின் வார்த்தைகளும் வாழ்க்கையும் நற்செய்தியாக மீட்பின் வழியாக மாறின. சட்டங்களின் ஒழுக்கமல்ல, அன்பின் ஆட்கொள்ளல்தான் அவசியமென்றார். அர்த்தமற்ற சடங்குகளல்ல, உள்ளத்தில் இறைவனை உணர்வதுதான் வழிபாடு என்றார். இயேசுவின் போதனைகள் புரட்சியாகப் பொங்கின. சாதனைகள் ஆள்வோருக்கும் குருக்களுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் சவால்களாக எழுந்தன. இரவோடிரவாக ஒரு விசாரணை. மறுநாள் கல்வாரியில் சித்திரவதை செய்யப்பட்டு சிலுவையில் படுகொலை. ஆனால் இஸ்ராயேலர் இன்னமும் மீட்பரின் மீட்புக்காய் காத்திருக்கின்றார்கள்.

ஆகவே, என்று நான எனக்குள் சென்று என்னுணர்வு பெற்று இறையுணர்வு பெறுகின்றேனோ அன்றுதான் கிறிஸ்மஸ். என்று என்னுணர்வும் இறையுணர்வும் சங்கமமாகின்றதோ அச்சங்கமத்தில்தான் இறைவன் பிறக்கின்றார். அப்பொழுதுதான் "இறைவன் நம்மோடு" (இம்மானுவேல்) என்பது நிஜமாகிறது. எவ்வளவிற்கு மனிதத் தடைகளிலிருந்து நான் விடுதலை அடைகின்றேனோ அவ்வளவிற்குத்தான் மகிழ்ச்சி பிறக்கும். நான் தேடும் வாழ்க்கையில் அர்த்தம் கிடைக்கும். நான் மன்னித்து வாழ்வேன். உண்மையைத் தேடி உயர்ந்த மதிப்பீடுகளுடன் வாழ்வேன். அதுதான் மனித வளர்ச்சி. மனிதன் தெய்வீகத் தன்மையில் வாழ வழி. இதுதான் கிறிஸ்தவ ஆன்மீகம் எனவே நத்தார் வெறும் களியாட்டமாக கவர்ச்சி நிறைந்த நிகழ்ச்சியாக மாறிவிட இடம் கொடுக்காமல் உள்ளார்ந்த மாற்றம் பெற்று உண்மை மகிழ்ச்சியுடன் பாலன் நம்மில்-நம் உள்ளக் குடிலில் தவழும் ஒரு நேரமாக இதை மாற்றிக் கொள்வோம்.

*சகோ.ச.சத்தியராஜ்*
*புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி*
*யாழ்ப்பாணம்*

## அடிமைத் தளைகளை உடைத்தெறிவோம்

### "குழந்தை" - முருங்கன்



*அன்பினைக் காட்டி அருளினை ஊட்டி*
*ஆதரை மீதில் தீதுகள் மீட்டி*
*இன்புடன் அன்பினை எல்லோர்க்கும் காட்டி*
*இறைமகனாக சிலுவையில் மாண்டார்*

*பாடுகள் பட்டு பாவங்கள் களைந்து*
*பாரினில் எங்கும் பலமுடன் திரிந்து*
*நாடுகள் தோறும் போதனை புரிந்து*
*நல்ல தோர் உலகை நலமுடன் படைத்தார்*

*நீதியைச் சொல்லி நேர்மையைப் படைத்தார்*
*நிம்மதியாக வாழ்வினைக் கொடுத்தார்*
*விழிப்பில் நின்று விளக்கமும் அளித்தார்*
*வெற்றியின் வேந்தனாய் உலகத்தில் மலர்ந்தார்*

*உலகத்தின் ஒளியாய் உண்மையைப் படைத்தார்*
*ஒவ்வொரு மாந்தரின் உள்ளத்தைத் தொட்டார்*
*நலமதாய் சாதனை நாட்டினில் புரிந்தார்.*
*நல்ல சீர்களை நலமுடன் தெரிந்தார்*

*அடிமையின், சின்னத்தை அளித்துமே நின்றார்*
*அகல் விளக்காக அன்பினைப் பொழிந்தார்*
*அடிமைகள் தீர மீட்பினைக் கொண்டார்*
*மேதினி மீதில் புரட்சியும் செய்தார்*

*எங்கள் உள்ளங்கள் எழில் பெற வேண்டும்*
*எழுந்திடும் தீயவை மறைந்திட வேண்டும்*
*பொங்கிடும் மனமதில் புரட்சியும் வேண்டும்*
*புதுப்படைப்பாக நாம் மாற வேண்டும்.*



## அறி(தெரி)ந்து கொள்ளுங்கள்

முதன் முதலில் கிறிஸ்மஸ் குடிலினை உருவாக்கியவர்? புனித பிரான்சிஸ் அசிசியார்.
முதன் முதலில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம் ஆரம்பமான நாடு? ஜேர்மனி
முதன் முதலில் கிறிஸ்மஸ் கார்ட் அனுப்பும் வழக்கம் ஆரம்பமான நாடு? இங்கிலாந்து
முதன் முதலில் கிறிஸ்மஸ் தாத்தா (சான்ராகிளாஸ்) என்று அழைக்கப்பட்டவர்?
புனித நீக்கிலாஸ்.
முதல் கிறிஸ்து பிறப்புப் பாடலை இயற்றியவர்?
புனித பிரான்சிஸ் அசிசியார்.
முதன் முதலில் கரோல் பாடலை அறிமுகப்படுத்தியவர்?
புனித பிரான்சிஸ் அசிசியார்.
முதன் முதலில் கிறிஸ்மஸ் மரத்தை மெழுகுவர்த்திகளால் அலங்கரித்தவர்?
மாட்டின் லூதர்



கிறிஸ்மஸ் தினத்தன்று பிறந்த விஞ்ஞானி?
சேர் ஐசாக் நியூட்டன்
அமைதி இரவு புனித இரவு என்னும் பாடலை இயற்றியவர்?
வண. யோசவ் மோகர் 1818ல்
வானோர் கீதம் பாடிட என்னும் பாடலை இயற்றியவர்?
சார்ல்ஸ் வெஸ்லி 1730ல்
வாரும் வணங்குவோம் என்னும் பாடலை இயற்றியவர்?
புனித பொனவெந்தூர்
கிறிஸ்மஸ் காலத்தில் தலை வெட்டப்பட்ட மறை சாட்சி?
புனித தோமஸ் பெக்கற்
கிறிஸ்மஸ் மரத்தில் நட்சத்திரம் தொங்கவிடக் காரணம்?
மூவரசர்களுக்கு வழிகாட்டியதை நினைவு படுத்த
கிறிஸ்மஸ் மெழுகுவர்த்தி நினைவூட்டுவது?
கிறிஸ்து இருளில் ஒளி
கிறிஸ்மஸ் சோடனைகள் வரக் காரணம்?
பழைய ஐரோப்பிய வழக்கம்

*தொகுப்பு:*
அருட் சகோதரி கனிசியஸ்
மன்னார்

## எமது மீட்பரின் வருகையை எப்டி வரவேற்கப் போகின்றோம்?

### அ.மேசி, கர்த்தர் கோவில், கீரி

நாட்டின் இன்றைய நிலையில் கிறிஸ்தவர்களாகிய எமக்கு ஒரு பாரிய பணி உண்டு. உரிமை இழந்து ஒடுக்கப்பட்டு பல உயிர்களையும் பரிகொடுத்துக் கொண்டு இருக்கின்றோம். அழிவுகளுக்கு தீர்வு காண எடுக்கும் அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிகின்றன. இந்நிலையில் இறைவனில் நம்பிக்கை வைத்து குரலெழுப்ப வேண்டும். எமது செபவாழ்வு மறைபரப்பு பணி நோக்குடையதாக அமைய வேண்டும். பரஸ்பர உறவை வளர்க்க எமது செபங்கள் வழி கோல வேண்டும். இறைவனில் நாம் கொள்ளும் தளராத நம்பிக்கையும், விசுவாசமும் மட்டுமே இப்பணியில் முன்னேறத் தூண்டும். எம்மில் பலர் கடந்த காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சில நேரங்களில் எமது குற்றங்கள் மன்னிக்கப்பட முடியாதவையென எண்ணி மனமுடைந்து போகின்றோம். கடந்த காலத்தையே மீட்டல் செய்து கொண்டிருக்கின்றோம். நாம் செய்த ஏதோ ஒரு தவறுக்காக சில நபருடன் அல்லது சில குடும்பங்களுடன் எத்தனையோ வருடமாக இணையாது விலகி இருக்கின்றோம். அல்லது உறவையே துண்டித்து விடுகின்றோம். இதனால் நாம் எம் மனச்சாட்சியை விற்று விடுகின்றோம். நாம் மீட்கப்பட எம் கடந்த கால சிறையிலிருந்து விடுதலை பெறவேண்டும். இதற்கு ஒரே வழி இறைவன் எமக்கு கொடுத்த பெரிய கொடையாகிய மன்னிப்பு. நாம் மன்னிக்கும் போது கடந்த காலத்தில் இருந்து விடுதலை அடைகின்றோம். மனப்புண்கள் ஆறப்படுகின்றன. மனவேதனை கலைந்து போகின்றது. இதனால் புதிய உறவு வளர்கின்றது. எனினும் மன்னிப்பது சுலபமல்ல இதற்கு தன்னலமற்ற உள்ளமும் மனதில் தாழ்ச்சியும் துணிவும் வேண்டும். எனவே நாம் இறைவனில் அதிகம் தங்கி இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாய் இருப்போம். இப்படி இருப்போமானால் எம் மீட்பரின் வருகையை அர்த்த முள்ளதாக்க எம்மால் முடியும்.

இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். (லூர்க். 1:68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## சிறு கதை
## கை நனைக்காதவர்கள்

அ. மன்னார்மணி

தாசனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. அன்றைய பத்திரிகையில் வார இதழின் குறித்த வரிகளை மீண்டும் மீண்டும் வாசித்தான். அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் முதற்பரிசைப் பெற்றிருந்தான்.

"இவர் தான் பெரிய எழுத்தாளர். எத்தனை விண்ணன்களெல்லாம் எழுதப்போறாங்கள். இவருக்குத்தான் பரிசு கிடைக்கப்போகுது."

மனைவி சுசிலாவின் நக்கலின் மத்தியிலும் விடா முயற்சியுடன் எழுதி முதற் பரிசைத் தட்டி விட்டான். அவனது செந்நெல் கிராமமே அச்செய்தி கேட்டு குதூகலித்தது. தாசனுக்கு விழா எடுத்து பொன்னாடை போர்த்தி பாராட்ட ஊரே திரண்டது. இதற்கு காரணம் இல்லாமலில்லை.

தாசன் அப்பிரதேசத்தில் உயர் அதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றான். அக்கிராமத்துக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளான். அவனிடம் உதவி பெறாதவர்கள் அக்கிராமத்தில் எவரும் இல்லை என்றே கூறலாம். அந்தளவுக்கு அவன் அக்கிராமத்திற்கும் மக்களுக்கும் சேவையாற்றி, அவர்களது நன்மதிப்பை பெற்றிருந்தான். இந்நிலையில் அவனை ஏதோ ஒரு நேரத்தில் பிரமாண்டமான முறையில் கௌரவிக்கவேண்டுமென சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தனர். சிறுகதைப்போட்டியில் முதற்பரிசு பெற்றது நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்தது அவர்களுக்கு.

அன்று அக்கிராமத்து பாடசாலையின் இல்ல விளையாட்டுவிழாவும் நடாத்துவதற்கு ஏற்பாடாயிருந்தது. இதற்கும் தாசனையே பிரதம அதிதியாக அழைத்திருந்தார்கள். அதனைத் தொடர்ந்து பாராட்டு விழாவை நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பாடசாலை விளையாட்டு மைதானம் செந்நெல் கிராமத்து குளப்புலவை அண்டியதாக அமைந்திருந்தது. தாசனின் வீடு குளக்கட்டின் பக்கமாக உள்ளது. அது சிறுபோக சீசன். அக்கிராமத்துக் குளப்புலவில் சிறுபோக நெற்செய்கை செய்யப்பட்டு பச்சைப் பசேலென காட்சியளித்தது. அதில் தவழ்ந்து வந்த தென்றல் காற்று நீண்டு நிறைந்து கிடக்கும் குளத்து நீரிலும் தவழ்ந்து வந்து உடம்பில் படும் போது ஜில்லென்றிருக்கும். குளக்கட்டு ஓரமாக நெடித்து பருத்து வளர்ந்திருக்கும் மருதமரங்கள் மருதநிலச் சூழலை நினைவூட்டின.

இளங் காலைப் பொழுதில் கதிரவனின் கதிர்கள் பட்டுத்தெறிக்க, பாண்ட் இசைக்க, ஊரவர்கள் புடைசூழ, மாலை மரியாதைகளுடன் குளக்கட்டு வழியாக ஊர்வலமாக குள மைதானத்திற்கு தாசன் அழைத்து செல்லப்பட்டான்.

அக்குளக்கட்டின் முடிவில் ஒருவளைவு. நீண்டுயர்ந்த சடைத்த புளிய மரமொன்று அக்கிராமத்து மக்களின் காலத்திற்கு முந்தியிருந்தே நிற்கின்றது. அவ்விடத்திலிருந்து வடக்குப் புறமாகத் திரும்பினால் அக்கிராமத்துச் சவக்காலை. தெற்குப் பக்கமாகத் திரும்பினால் பாடசாலை விளையாட்டு மைதானம்.

இவ்விடத்தில் வரும்பொழுது தாசனின் நினைவுகள் வேகமாகச் சுழன்றன. "இந்தச் சவக்காலையில் தான் நான் செத்தபிறகு என் உடலை அடக்குவார்கள். இனி நான் செத்தாலும் பரவாயில்லை. பிறவிப்பயனை அடைந்து விட்டேன். இலட்சியத்தை அடைந்து விட்டேன். இந்தக்கிராமத்தில் பிற்படுத்தப்பட்ட குடிமகனாகப் பிறந்திருந்தும் எனக்கு இந்த உயரிய கௌரவம் மேல்மட்ட சமூகத்தினரால் வழங்கப்டுகிறதே" என்று புளங்காகிதம் அடைந்தான்.

தனது தந்தை அவ்வூரில் குடிமைத் தொழில் செய்து மேல்மட்ட சாதியினரின் கலியாண, செத்தவீடுகளுக்கு குடிமகனாக அழைக்கப்பட்டு செங்கம்பள 'சாக்கு' விரித்து கௌரவமளிக்கப்பட்டதை எண்ணிப்பார்த்தான். இந்தளவில் உயர்ந்த அதே வர்க்கத்தினரால் தனக்கு உயர் கௌரவமளிக்கப்படுவதை எண்ணி ஆனந்தக் கண்ணீர் வடித்தான். தந்தைக்கு மகனாற்றும் நன்றிக் கடனாகக் கருதினான்.

செந்நெல் கிராமத்து பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்து கல்வி கற்று உயர் பதவியை அடைந்து தனது சமூகத்து ஏனையவர்களையும், உத்தியோகத்தர்களாக்கி, பட்டதாரிகளாக்கி கல்வித்துறையிலும் முன்னேறச் செய்தான். இந்நிலையும் அக்கிராமத்தில் சாதிபேதம் குறைவதற்கு காரணமாயமைந்தது.

அதுமட்டுமன்றி, அக்கிராமத்து மேல் வர்க்கத்தைச் சேர்ந்த பரந்த நோக்கங் கொண்ட பெரியவரான அந்தனிமுத்தரின் அளப்பரிய துணிகரமான சேவையும் மற்றுமொரு காரணம். அவர் ஒரு வைத்தியர். புலவரும் கூட. புனித சூசையப்பரின் வரலாற்றை நாட்டுக்கூத்து வடிவமாக ஒரு இராக் கதையாப் பாடி செந்நெல் கிராமத்து இரு சமூகத்து மக்களையும் ஒன்றாகச் சேர்த்து நடிப்பித்துக் காட்டி சாதனை படைத்தவர். இதனால் அவரது சமூகத்தில் பலத்த எதிர்ப்பு. அதனையும் பொருட்படுத்தாமல் சமத்துவத்திற்கு துணை நின்றவர். தாசன் தலைமையில் இவரது நாட்டுக்கூத்து மேடையேறிய இரவில் இவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அதே அந்தனிமுத்தர்தான் தாசனுக்கு பாராட்டு விழா நடத்த முன்னின்று செயல்படுகிறார்.

பாடசாலை விளையாட்டு விழாவின் இறுதியாக பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்று முடிந்து தாசனின் பாராட்டு விழாவும் ஆரம்பமானது.

பலரும் பலவாறாகப் பாராட்டி பேசினர். அந்தனிமுத்தர் தாசனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தாசன் தன்னையே மறந்தான். "சாதிகள் இல்லையடி பாப்பா தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" பாரதியின் கனவு நனவாகியதை உணர்ந்தான். சிறுவயது முதற்கொண்டே தனது இலட்சியப் போராட்டம் பூரண வெற்றியடைந்து விட்டதாக அறிந்தான். தனது செந்நெல் கிராமத்தில் சாதி முறையே அற்றுப்போய் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற நிலை உருவாகி சமத்துவம் தோன்றி விட்டதாக பூரிப்படைந்தான்.

தாசன் தனது உரையில் இன்றுதான் எமது கிராமத்தில் சாதி முறை நீங்கி சமத்துவம் பூரணத்துவம் அடைங்துவிட்ட நாள் என்று கூறி, தன்னைப்பாராட்டிக் கௌரவித்தமைக்கு கிராமத்து அனைத்து மக்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து, தனது வீட்டில் ஏற்பாடாகியிருக்கும் இரவு விருந்தில் சகலரும் தவறாது கலந்து விருந்துண்டு செல்ல வேண்டுமென இரக்கமாகக் கேட்டுக் கொண்டான்.

அனைவரும் ஒருமித்த குரலில் இசைவு தெரிவித்து, வீட்டிலிருந்து வந்த அதே குளக்கட்டு வழியாக, 'மாமனை தன்னை நாடியே...' போன்ற நாட்டுக்கூத்துப் பாடல்களைப்பாடி மத்தளமடித்து வீட்டுக்கு கூட்டிச் சென்றனர்.

தாசனின் வீட்டில் பெரிய பந்தல் போட்டு மலர் மாலைகளாலும் மின் விளக்குகளாலும் அழகாக சோடிக்கப்பட்டிருந்தது. வீட்டுப்பந்தலில் அனைவரையும் வரவேற்று அமரவைத்து, தவறாது விருந்துண்டு செல்லுமாறு தாசன் மீண்டும் கேட்டுக் கொண்டதோடு விருந்து பரிமாற்றுவதற்கான ஏற்பாடுகள் யாவும் தடல் புடலாக நடைபெற்றன. சோறு பரிமாறப்படும் வேளையில் பந்தியில் எவரையுமே காணவில்லை. ஒருவர் பின் ஒருவராக பந்தலின் பின்புறமாகச் சென்று ஏதோ குசு குசு வேன்று கதைத்துக் கொண்டு நின்றனர். அவர்கள் கதைப்பது தாசனுக்கு நன்றாகவே கேட்டது.

"எளிய சாதி வீட்டில் கை நனைச்சா அவனுகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்.? நாமலும் கீழ் சாதியா மாறிட வேண்டியதுதான். வாங்கடா விடடிட்டு... உங்கட வீடுகளில் இறைச்சிக்கறி சோறு.. கண்டிருக்க மாட்டியளா..?" அக்கிராமத்தைச் சேர்ந்த சேவியர் அதட்டிக் கூற அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வீட்டை விட்டு வெளியேறினார்கள். தாசன் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிந்தான். அந்தனிமுத்தரும் அவர்கள் பின்னால் கடைசியாக வெளியேறினார். பொன்னாடை என்ற பெயரில் சாக்கினால் தன்னை போர்த்துவதான உணர்வை அடைந்தான் தாசன்.

அடுத்த நாள் கிறிஸ்மஸ். தன்னையே தாழ்த்தி மாடடைக்குடிலில் மனுவுருவான கிறிஸ்து ஆயக்காரரோடும் பாவிகளோடும் விருந்துண்டு சமதர்ம சமத்துவ அன்பிய சமூகத்தை உருவாக்கி வாழ்ந்து காட்டியதை அன்றைய திருவிழாத் திருப்பலியின் மறையுறையின் போது பங்குத்தந்தை தெட்டத்தெளிவாக எடுத்துரைத்தார்.

தமது அயலவர்களுடன் மனம் திறந்து உறவாடாவிட்டால், கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடுவதில் அர்த்தமில்லை என்பதனை நன்குணர்ந்தனர் அவ்வூர் மக்கள்.

வேறென்ன. . . . அன்றைய பகல் விருந்து தாசன் வீட்டில்தான். கிறிஸ்து பிறப்பின் உண்மையான அர்த்தத்தை அன்று தான் அவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது.



## மகிமையின் மாதா

மலர்களில் எல்லாம் சிறந்த மலர் றோஜா அவ்வாறே மனுக்குலத்தில் சிறந்தவர் மண்ணுலக விண்ணுலக அரசி மரியாள். மனிதம் மீட்படைய மனுக்குலத்திற்கு மாமன்னனை தாங்கவும் பேணிக் காக்கவும் வழிகாட்டியாகவும் விளங்கியவள் மரியாள். இந்த மாதாவின் பெருமையை, மகிமையை இந்த உலகம் அறிந்து கொண்டுதான் இருக்கின்றது ஆயினும் அவளின் பரிந்துரைஙய, வேண்டுதலை எமக்காக அவள் அனுபவித்த சொல்லொணாத் துன்பங்களை நாம் மறுத்துவிட முடியுமா?..

தாய்மையின் உறைவிடமாக தாழ்ச்சியின் ஊற்றாக தம்மையே நிறைவாக இறைவனுக்காக அர்ப்பணித்தவள். தம்முடைய பரிசுத்த வாழ்க்கையால் ஆதிப்பெற்றோரின் பாவவாழ்வை மாற்றி பரிசுத்த வாழ்வுக்கு அழைக்கும் புனிதவதி. மாசில்லாமல் உற்பவித்தவள். மனிதம் மீட்படைய மனுமகனைத் தாங்கியவள். அவளின் பணியை விபரிக்க முடியுமா? புனிதர்களின் கூற்றுப் படி "மரியாள் மீட்பின் ஏணி, விண்ணக ஏணி, அவள் வழியாய் மனிதர் விண்ணகம் சேரும் பொருட்டு கடவுள் மண்ணகத்திற்கு வந்தார்" புனித புலா ஜெஸ்சியஸ் "மரியாள் விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டப்படுவதால் அனைவருக்கும் அரசி" என்றும் புனித பொனவெஞ்சர் "மரியாளே விண்ணகவாயில். அவர் வழியாகவே நாம் விண்ணகம் போக முடியும். ஏனெனில், விண்ணகம் போவதற்கு வேண்டிய அருள் அவ் அன்னையின் வழியாகவே வருகின்றது" என்றும் புனித அல்போன்ஸ் "மரியாளின் வழியாக மட்டுமே நாம் எல்லோரும் விண்ணகம் போகலாம் ஏனெனில் அவள்தான் வாயில்" என்றும்கூறியுள்ளனர். இவைகள் எல்லாம் எம்முடைய விசுவாச உண்மையை ஆழப்படுத்தும் சான்றுகள். ஆயினும், மாதாவை எவ்வாறு மகிமைப்படுத்தலாம் என்ற கேள்வி எம்மில் எழலாம். அவளின் புனித வாழ்வை முழுமையாக பின்பற்றுவதாலும் அவளின் தாழ்மையின் மகத்துவத்தை முழுமையாக்கிக்கொண்டு வாழுதலுமாகும். அதாவது

"நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" லூக் 1: 38

என்ற வார்த்தை எம்முடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் எதிரொலிக்கப்பட வேண்டும். அத்துடன் அவளின் திரு நாதமாகிய ஜெபமாலையை அனுதினம் ஓதி அவளுக்கு றோஜா மலராகப் படைக்க வேண்டும். அப்போது எம் உள்ளம் புத்தொளி பெறும் புதுமணம் தரும்.

*அருட் சகோ. M. நிர்மலராஜ்*
*செ.தா.*
*ஜெபமாலை ஆச்சிரமம்*
*மதகுவைத்த குளம், வவுனியா.*

## வானதூதர்

எம்மை எல்லாம் வழி நடத்தி வரும்
கடவுளின் தூதருக்கு வடிவமிலலை.
தூதரும் இல்லை என்றால்
கடவுளின் வழி நடத்துதலும்
கிடைப்பதில்லை.
இவருடைய வழிநடத்துதல்
கிடைப்பதினால் தான்
எம் மத்தியில் இறைவனைக் காண்கின்றோம்.
அவரோடு உரையாடுகின்றோம்.
அயலவரில் அவரின் செயலைக்
காண்கின்றோம்.
தூதருடைய செயற்பாடு இல்லை என்றால் .
இறை அன்பை நாம் காண முடியாது.
எம் மனம் இறை அன்பையும் அவரையும்
ஏற்க மறுக்குமென்றால் தூதருடைய
செயலையும் நாம் காண முடியாது.
தூதருடைய வருகையை எம் வெறும்
கண்களால் பார்க்க முடியாது.
ஞானம் நிறைந்த கண்களாலேயே அவரைக்
கண்டு அறிய முடியும்.
இறை வாழ்க்கையும் ஒரு தேடல்தான்
அதை தேடித் தேடி மனது அலைகிறதே..

*மு. டெனி*
*கற்கிடந்த குளம், முருங்கன்*

## கடி ஜோக்ஸ்



ஒருவர்: இந்த அலுவலகத்திலே நின்று கொண்டே வேலை செய்கிறாரே ஒரு பெண் அவரது பெயர் என்ன?
மற்றவர்: 'அமரா'வதி

பாபு: ரேடியோவைக் கண்டு பிடித்தது யார் சொல்லு பார்க்கலாம்?
கோபு: முதலில் அதைத் தொலைத்தது யார் சொல்லு பார்க்கலாம்?

நண்பர்: உங்கள் குழுவில் மிருதங்கம் வாசிச்சவரை நிறுத்திட்டீங்களே ஏன்?
பாகவதர்: என் பாட்டுக்கு வாசிக்காம அவர் பாட்டுக்கு வாசிச்சிசுக் கொண்டிருந்தார் அதுதான் நிறுத்திட்டன்

அவர்: எனது பிறந்த நாளும் எனது மனைவியின் பிறந்த நாளும் ஒரே நாள் தான்.
இவர்: அப்படியா? எனது திருமண நாளும் என் மனைவியின் திருமண நாளும் ஒரே நாள் தான்.

நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியில் இருந்தும் நம்மை மீட்பார் (லூக். 1:71)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட சிறப்பிதழ்

## "ஒளி பிறந்து வழி திறக்காதோ? இருள் மறைந்து அருள் சுரக்காதோ? அடிமை வாழ்வு அகன்று உரிமை வாழ்வு விடியாதோ?"

### பிறக்கட்டும் புதிய பிரபஞ்சம்

நல்லவர்களே! சற்று நில்லுங்கள்
நயமாக சில வரிகள் பகர்கிறேன்
நம்பியே கேட்டுச் செல்லுங்கள்.

மயானமாய் இருக்கும் எம் தேசம்
மங்களம் பெறட்டும். - இனிவரும்
புதிய பொழுதுகள் புது யுகம் படைக்கட்டும்
பிணவாடை வீசும் எம் சரித்திரங்களில்
வைகறைகள் வசந்தகள் பாடட்டும்

காத்திருந்த எம் காலங்கள் இனிக்
கைகூடி வரட்டும்
ஏங்கிய எம் நெஞ்சங்கள் - புதிதாய்
பிறக்கட்டும்
காலங்கள் முழுவதும் கார்கால மாகட்டும்

அன்று பெத்லகேமில் பிறந்திட்ட
குழந்தையால் பிரபஞ்சம் விடுதலை அடைந்தது
இன்றும் அதே குழந்தை பிறந்துள்ளது.
இன்று இருண்ட எம் பிரபஞ்சம்
ஒளி பெற வேண்டும். - இல்லையென்றால்
அக்கினி கொண்டு இப் பிரபஞ்சத்தை எரித்து
விட்டுவோம் - அதன் பின்
ஆழுக்கோர் புதிய பிரபஞ்சம் தயாரிப்போம்
அதையாவது அழுக்கின்றிக் காப்போம்.

*ஜோ.பே.ஜென்சி*
*புனித மரியகொரற்றி கோவிலடி*
*10,பெரிய பண்டிவிரிச்சான், மடு*

### புதுப்படைப்பாய் நான் மாற..!

எழுந்தருளும் என் இறைவா!
ஏழை எந்தன் இதயத்தில்
புதிதாய் ஓர் உள்ளம் தாரும்
புதுப்படைப்பாய் நான் மாற.

உனக்காக நான் வாழ
உறவெல்லாம் நீயாக
என் இதய வீட்டினிலே
குடி புகுவாய் என் இறைவா.

உன்னுடனே உறவாடி
உன் புகழை தினம் பாடி
எந்நாளும் நான் வாழ
குடி புகுவாய் என் அகமே

நான் உன்னைத் தேடி வர
நாளெல்லாம் கூட வர
மாசு அற்ற மனம் தாரும்
புதுப்படைப்பாய் நான் மாற.
செ. மேரி கவிதா பீரிஸ்
பேசாலை.

### புத்தாண்டு புலர்ந்திட

புது யுகம் மலர்ந்திட புனிதம் மகிழ்ந்திட
புத்தாண்டே வருக!
புதுமணம் கமழ்ந்திட புதுமைகள் பெருகிட
புத்தாண்டே வருக!
புத்துணர்ச்சி பெற்றிட புதுப்புனல் பாய்ந்திட
புத்தாண்டே வருக!

காரிருள் மறைந்து கதிரொளி உதித்திட
புத்தாண்டே வருக!
கனத்த இதயங்கள் கனிவாக மாறிட
புத்தாண்டே வருக!
கண்ணீரும் கம்பலையும் கரைந்து போய்விட
புத்தாண்டே வருக!

பகைமைகள் மறைந்து பரிவுகள் பிறக்க
புத்தாண்டே வருக!
பழையன கழிந்து புதியன பிறந்திட
புத்தாண்டே வருக!
பலாத்காரம் ஒழிந்து பாசம் பெருகிட
புத்தாண்டே வருக!

சண்டைகள் ஓய்ந்து சாந்தி பிறக்க
புத்தாண்டே வருக!
சச்சரவு மறைந்து சமரசம் ஓங்கிட
புத்தாண்டே வருக!
சலனங்கள் மறைந்து சுகவாழ்வு மலர்ந்திட
புத்தாண்டே நீ வருக!

*எஸ்.யூட் கொலின் (தயா)*
*பெரியபண்டிவிரிச்சான், மடு*

### ஒளி பொழிந்தாய்

ஜி. சுகந்தி, மன்னார்

தேயாத இருட்டில் நின்ற எங்களை
தேற்ற வந்த வெளிச்சமே !
ஒளி கொடுக்க உன்னையே
உருக்கிக் கொண்ட மெழுகே!
மாட்டுத் தொழுவத்திலே
ஏழ்மை நிலையில் உதித்த தீபமே!
எங்கள் மனக் கோயிலில்
ஒளிந்து கொண்டிருக்கின்ற கீதமே!
உன் சிரிப்பில்தான் உலகின் உதயமே!
உன்னை நினைத்தாலே
சுகம் கொள்கிறது எங்கள் சுவாசமே!
வழிகாட்ட வந்தவன் நீ திருந்தச் சொன்னவன் நீ
உள்ளம் வருந்தச் சொன்னவன் நீ
மனம் உருகச் சொன்னவன் நீ
மண்டியிடச் சொன்னவன் நீ
மன்னிக்கச் சொன்னவன் நீ
மனக் காயங்களுக்கு மருந்து போட்டவன் நீ
காந்த வார்த்தைகளைக் காதில் போட்டவன் நீ
கண்முன்னே கருணை மழை பொழிந்தவன் நீ
அன்பைப் பெருக்கச் சொன்னவன் நீ
பண்பைக் கூட்டச் சொன்னவன் நீ
பாவங்களைக் கழிக்கச் சொன்னவன் நீ
நியாயங்களை வகுக்கச் சொன்னவன் நீ
மாடடைத் தொழுவத்தில் ஏழ்மையின் வடிவாய்
இரக்கத்தின் ஊற்றாய் அன்பின் பெருக்காய்
தியாகச் செம்மலாய் இப்பூவுலகில் அவதரித்த நீ
உன் இரட்சிப்பால் உலகைக் காக்க
மனிதனாய்ப் பிறந்தாய்
விளக்காக இருந்த என்னை ஒளிரச் செய்தாய்
மலராக இருந்த என்னை மணம் வீசச் செய்தாய்
பாடியது நான் இசைத்தது நீ
பற்பல நன்மைகளை எனக்கு அருளிய
இனிய பாலகன் இயேசுவே
இந்தப் பாக்களும் பூக்களும்
உனக்கே சமர்ப்பணம்

### விரிந்து கிடக்குது தேசம் எங்கும்

விரிந்து கிடக்குது
தேசம் எங்கும்
மனிதம்
வாழ்ந்திடவே.
பல யுகங்கள்
கடந்து புதியதோர்
ஆண்டில் புதிதாய்
வாழ்ந்திடவே.
புறப்படுவோம்
நாம் புதுயுகம்
படைக்க
வாருங்கள்
தோழர்களே!

பி.நெல்சன்
எழுத்தூர்

### போதும் போதும்

போதும் போதும் சண்டை போதும்
சமாதானம் இன்றி வாழ்ந்தது போதும்
வீடு இன்றி அலைந்நதது போதும்
விடியல் இன்றி தவீத்தது போதும்
உணவு இன்றி வாடியது போதும்
உறக்கம் இன்றி விழித்தது போதும்
மகிழ்வு இன்றி இருந்தது போதும்
மனிதம் இன்றி மடிந்தது போதும்
உறவினர் இன்றி உருகியது போதும்.
உடைமை இன்றி உழைத்தது போதும்
பாதுகாப்பு இன்றி பதுங்கியது போதும்
பணியகம் இன்றி உழைத்தது போதும்
வசந்தம் இன்றி வாழ்ந்தது போதும்
வலிமை இன்றி வருந்தியது போதும்
செல்வம் இன்றி உழைத்தது போதும்
செருப்பு இன்றி நடந்தது போதும்
காரணம் இன்றி பிடிபட்டது போதும்
கனிவு இன்றி கருகியது போதும்
வார்த்தைகள் இன்றி தவித்தது போதும்
வருமானம் இன்றி உழைத்தது போதும்

போதும் போதும் வாழ்ந்தது போதும்
நிமால்
சிறிய குருமடம், மன்னார்

உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. (லூக். 2:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் சிறப்பிதழ்



தைமகளின் வரவினிலே தமிழ்மகளின் சிறப்பினிலே
காவியங்கள் படைத்து நிற்க கனிவுடனே வாழ்த்துகிறோம்.
கடந்து வந்த காலங்களில் நடந்து வந்த பாதையினை
தெளிவுடனே திருத்திவிட்டு திரும்பவும் நாம் நடந்திடுவோம்
புதியதொரு வரவு கண்டு புன்னகைகள் சிந்திவிட்டு
புதுமைகளைப் படைத்துவிடப் புறப்படுவோம் தையதனில்
பொங்கிவரும் பொங்கலைப்போல் உள்ளமதில் நன்மை பொங்க
வாழ்ந்திடுவோம் பல்லாண்டு.

# திருப்பாலத்துவ சபைத் தினம் - தை 07

மனித வாழ்வில் இனிமையானதும் மறக்க முடியாத நினைவுகளைக் கொண்டதுமாக இருப்பது குழந்தைப் பருவமாகும். இவை எம் வாழ்வில் ஆழமாக வேர் ஊன்றப்பட்டவையாகும். இவ்விதமான குழந்தைச் செல்வங்களின் வாழ்வை விசுவாசத்தில் ஆழப்படுத்தி அவர்களின் உள்ளங்களை நல்வழிப்படுத்திக் காத்திட வேண்டும் என்ற நோக்குடன் ஆயர் சார்ள்ஸ் டீ போபின் ஜான்சன் அவர்கள் 1843 ஆம் ஆண்டில் திருப்பாலர் சபையை ஆரம்பித்தார்.

கள்ளம் கபடமற்ற குழந்தை உள்ளங்கள்ளை மாசு கொண்ட மனித சமுதாயத்தில் இருந்து காத்து வழிநடத்த வேண்டும் என்பதே இச் சபையின் நோக்கமாக இருந்தது. நாகரீகம், சுயநலம், பாவம், தலைவிரித்தாடும் இக் கால கட்டத்தில் சிறுவர்களை இயேசுவில் இணைந்த, சிறந்த மறைத் தூதர்களாக, சீடர்களாக, நண்பர்களாக, உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தி.பா. சபை இன்று இலங்கையில் எல்லா மறை மாவட்டங்களிலும் செயற்படுகின்றது.

இவ்வாறு செயற்படும் இச் சபையின் திருநாளை இலங்கைத் திருச்சபை இன்று (7.1.2001) நினைவு கூருகின்றது. இவ்வினிய நாளில் பெரியோர் பெற்றோர் ஆசிரியர்கள் யாவரும் இணைந்து சிறுவர்களுக்காக விசேட விதமாக மன்றாட அழைக்கப்படுகின்றார்கள்.

## திருப்பாலத்துவ சபை தமிழ்ப் பிரிவின் தேசிய செயலாளர் அருட் சகோதரி நிர்மலா அவர்களின் செய்தி



## இயேசு நமக்கு நண்பர்

சிறுவர்களைக் கொண்டு சிறுவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் பகிர்ந்த வாழும் மனப்பான்மை ஒற்றுமை அன்பு அமைதி போன்ற நற் பண்புகளை வளர்ப்பதுடன் மறைபரப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இச்சபையின் குறிக்கோள்களுள் ஒன்றாகும். மேலும் திருச்சபையை அன்பு செய்பவர்களாக, குடும்பத்தில் நல்ல பண்புள்ள மகனாக, மகளாக, பாடசாலையில் அறிவு ஆற்றல் கொண்டவராக சமுதாயத்தில் சிறந்த கிறிஸ்தவ செல்வமாக வளர வாழ இச்சபையினால் ஊக்குவிக்கப் பட வேண்டும். மலரைப் போன்று மலர்ந்து வரும் சிறுவர் சமுதாயம் இயேசுவில் நிலைத்திருக்க பரிசுத்த தனத்தில் வளர சிறுவயதில் இருந்து பயிற்றுவிக்கப்பட வேண்டும் செல்வங்களில் மேலான செல்வமாகத் திகழும் இவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பனவும் ஆகும். எனவே போர் மேக வான் மத்தியில் சிக்கித் தவிக்கும் சிறுவர்கள் எம் மத்தியில் ஆயிரம் உண்டு அனாதை இல்லங்களில் இன்னும் வறுமையின் நிமித்தம் அடிமைகளாக உழைக்கும் சிறுவர்கள், ஊன முற்றவர்கள் உண்ண உடுக்க எதுவுமின்றி வாழ்பவர்கள் என்று வாழும் சிறுவர்களைப் பட்டியல் படுத்தும் ஒரு காலமாக உள்ளது. இந் நிலையில் வாழும் குழந்தைகளுக்கு வாழ்வளிக்க சிறுவர்களுடன் இணைந்து குடும்பமாக செபத்தினால் சிறு நன்கொடையினால் உதவி அளிக்கும்போது பலர் இதனால் வாழ்வு பெறுகின்றனர் என்பதை மறைக்க முடியாது. சின்னஞ் சிறுவர் ஒருவருக்கு நாம் செய்யும் போது அதை தனக்கே செய்கின்றோம். என்று இயேசு கூறுகின்றார். எனவே எமது உதவிக் கரத்தை தாராள உள்ளத்துடன் நீட்டுவோம்.

திருச்சபையின் நம்பிக்கை சின்னங்களாக திகழும் சிறுவர்கள் இறை அன்பில், பிறர் அன்பில் வளர வேண்டும் என்றால் சிறு வயதில் இருந்து இவர்களை ஊக்குவிக்க வேண்டும். "இயேசு நமக்கு, நாம் இயேசுவுக்கே" என்று சிறுவர்கள் குரல் எழுப்ப வேண்டும். அவர்கள் எடுத்துரைப்பது போன்று வாழ வேண்டும் என்றால் பெற்றோர், பெரியோர் இவர்களின் வழி காட்டிகளாக மாற வேண்டும். பெற்றோரே உங்கள் பிள்ளைச் செல்வங்கள் இறை அறிவைப் பெற வேண்டும் - இறை அன்பில் வளர வேண்டும் என்று விரும்புகின்றீர்களா? அப்படியாயின் இறை அறிவைக் கற்றுக் கொடுக்க இறை வழியில் இட்டுச் செல்ல இதோ திருப்பாலத்துவ சபை காத்திருக்கிறது.... உங்கள் குழந்தை நன்றே உருவாகி மறை பரப்ப ... நாடுங்கள் உங்கள் பங்குத் தந்தையை. சேர்த்திடுங்கள் உங்கள் குழந்தையை தி.பா.சபையில்.. நன்றி.

### அன்புத் தம்பி தங்கையரே!

இந்த நன்நாளில் மன்னா
உங்களை மனதார
வாழ்த்துகின்றது.
திருப்பாலத்துவ சபைக்
கூட்டங்களுக்கு ஒழுங்காகப்
போய் நல்ல பிள்ளைகளாக
வாழ வளர
வாழ்த்துகின்றோம்
- ஆசிரியர் -

அறுவடை நாளில் மகிழ்ச்சியுறுவது போல் உம் திருமுன் அவர்கள் அகமகிழ்கிறார்கள் (எசா. 9:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

**ஹலோ! தம்பி தங்கையரே எப்படி உங்கள் கிறிஸ்மஸ்?**
பிறக்க இருக்கும் புது வருடத்தில் உங்கள் ஆற்றல் திறமைகளை வளர்த்துக் கொள்ள இச் சிறுவர் பொழிவை பயன்படுத்துங்கள். உங்களுக்கு எமது அன்பான கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். (ஆசிரியர்)

## குட்டிக் கதை

## தாய் சொல்லைத் தட்டாதே

நாவலூர் என்னும் சிறிய கிராமத்திலே தாயும் மகனும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் மிகவும் வறியவர்கள். அன்றாட உணவுக்காக அல்லலுற்றுக் கொண்டிருந்தனர். இதனை தாங்க முடியாத மகன் தான் வேறு ஊர் சென்று பணம் சம்பாதிக்க எண்ணினான். தாயின் சொல்லை அலட்சியப் படுத்தாது நடக்கும் அவன், தன் எண்ணத்தை தாயிடம் கூறினான். அவளும் அதற்குச் சம்மதித்தாள். அவன் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில் அந்தத் தாயானவள் மகனின் பாதுகாப்பிற்காக ஓர் சிறிய பெட்டியைக் கொடுத்து அவனை வழியனுப்புகிறாள். அவனும் மறுப்பின்றி அதனை வாங்கிக் கொண்டு சென்றான். வழியில் களைப்பால் ஓர் மரநிழலின் கீழ் தாய் கொடுத்த பெட்டியை அருகில் வைத்துவிட்டு அயர்ந்து தூங்கி விட்டான். அப்பொழுது அங்கு வந்த நாகபாம்பு அவன் உறங்கிக் கொண்டிருந்த இடத்திற்கு அவனைத் தீண்டும் நோக்குடன் சென்று கொண்டிருந்தது. அவனருகில் இருந்த பெட்டியை கண்டதும் அதற்குள் தலையை நீட்டியது. பெட்டியிலிருந்த நண்டு தன் கொடுக்கால் அதை இரு துண்டாக வெட்டிக் கொன்று விட்டது. சற்று நேரத்தில் கண்விழித்து அது இறந்து கிடப்பதைக் கண்டு தனது தாயின் சாதுரியமான செயலைக்கண்டு மனம் மகிழ்ந்தான். தான் தாய் சொல்லைத் தட்டாது நடந்த படியால் அவளும் என்னை அன்பு செய்தாள் என்ற பெருமிதத்துடன் எழுந்து நடக்கலானான்.

இக்கதை மூலம் தாயின் அன்பையும் கரிசனையும் அறிந்த நாம்
தாய் சொல்லைத் தட்டாது நடப்போம் என்று உறுதி எடுப்போம்.

*ச. டயானா. தரம் - 11. கள்ளியடி.*

### சிறுவர் தொடர் கதை

## புனித சியென்னா கத்தரீன

**அங்கம் 7**

**27.** ஒரு நாள் கத்தரீன் கோயிலுக்குச் சென்று அங்குள்ள சிலுவையில் தொங்கும் இயேசுவின் திருவுருவைப் பார்த்து உருக்கமாகச் செபித்துக்கொண்டிருக்கிறாள். அதுவும் இயேசுவை நோக்கி. 'என் இதய அன்பரே. என் ஆண்டவரே! உம்முடைய பாடுகளில் எனக்கும் பங்குதர வேண்டும்.' என ஆவலுடன் கேட்கிறாள். என்ன ஆச்சரியம்! திடீரென ஐந்து ஒளிக்கதிர்கள் வெளிப்பட்டு, கத்தரீனின் வலது, இடது கரங்களிலும், வலது, இடது கால்களிலும், இதயத்திலும், இயேசுவின் ஐந்து காயங்களாப் பதிக்கின்றன.

**28.** பீசா நகரிலே கத்தரீன் எட்டு மாதங்கள் தங்கி இருந்தாள். அவளது இடைவிடா மறை உரை ஆற்றுகின்ற பணியாலும், இயேசுவின் ஐந்து காயங்கள் அவளது உடலிலே மிகுந்த வேதனையை ஏற்படுத்தியதாலும், அவளது உடல் நலம் சோர்வுற்றுத் தளர்ந்து போயிற்று. ஒரு அருட் சகோதரி, ஓய்வு எடுக்கும்படி அவளிடம் கூறினாலும், கத்தரீன் அதற்கு செவிமடுக்காது லூக்கா நகர் சென்று அங்குள்ள மக்களைத் திருத்தந்தைக்கு விரோதமாக கிளர்ச்சி செய்யாதவாறு எடுத்துரைக்கச் செல்கிறாள்.

**29.** மரண தண்டனை விதிக்கப்பெற்ற இருவரை, நெருப்பிலே பழுக்கக்காய்ச்சிய இரு இரும்புக் கம்பினால் சூடு போடுகின்றனர் காவலர்கள். ஆனால் அந்த இரு கைதிகளும் கத்தரீனுடைய பெயரைக் கூவி அழைத்ததால், உடலில் எந்தவித வேதனையையும் அனுபவிக்காமல் இருந்தனர். கத்தரீன் அவர்களின் அருகிலிருந்து, கவலைப்படாதீர்கள், வெகு விரைவில் நீங்கள் இருவரும் இயேசுவோடு விண்ணகத்தில் இருப்பீர்கள் என ஆறுதல் கூறுகிறாள்.

**30.** நகரிலே கொள்ளைநோய் ஒன்று தோன்றி 30,000 மக்களைப் பாதித்தது. ஏழைகள் உணவின்றி கைவிடப்பட்ட நிலையிலே கத்தரீன் இறையருளால் அற்புதமாக அவர்கள் மத்தியில் தோன்றி, ரொட்டியினை பலுகச் செய்து, நகரிலுள்ள அத்தனை மக்களுக்கும் பகிர்ந்தளிக்கும்படி செய்கின்றாள். பின்பு ..

கத்தரீன் தொடர்ந்தும் வருவாள்

## கவிதைப் பூக்கள்

### மண்ணில் மலர்ந்த மகிந்தன்

மானிடனாய் பிறந்த இறைவன்.
இன்பமதை உங்களுக்கு
இடைவிடாது பொழிவார்
அன்பை அமுதமாய்
பகிர்ந்துண்டு என்றும்
ஒன்றுபட்டு ஒற்றுமையாய்
வாழ்வோம்.
உங்கள் அனைவருக்கும்
என் நத்தார் புது வருட
நல்வாழ்த்துக்கள்

யா.அந்தோனிஸ், தரம்-6
பீடப்பணியாளர், மடுக்கோயில்.

### எமக்கு வேண்டும் உமது துணை

உயிர் வார்த்தை கற்று
உம் பிள்ளையாய் வாழ
எமக்கு வேண்டும்
உமது துணை

பெரியவர்க்கு கீழ்ப்படிந்து
ஏழைக்கு உதவி செய்து வாழ
எமக்கு வேண்டும்
உமது துணை

சிறுவர்கள் நாம்
மறைதூதர்களாக விளங்க
எமக்கு வேண்டும்
உமது துணை

சூ.ஸ்ரெலா நிலானி, ஆண்டு 7
தி.கு.க.மடம், மன்னார்.

### விவிலியப் பேச்சுப் போட்டி

### குழு 3 இல் (ஆண்டு 10) மறை மாவட்ட ரீதியில்

## முதலாம் இடம் பெற்ற பேச்சு



செல்வி. மரிய நிசாந்தினி பீற்றர் ஜெயராசா
வகுப்பு 9. வ / இறம்பைக்குளம் மகளிர்.ம.வி.
வவுனியா

### தலைப்பு : மன்னிப்போம் மறப்போம்

அருள் தரும் புத்தாயிரம் ஆண்டு எம்மனைவருக்கும் மன்னிப்பின் ஆண்டாகும். இது யூத சமுதாயத்தில் மோயீசன் சட்டத்திற்கிணங்க மன்னிப்பைக் கடைப்பிடித்தவர்களுக்கு ஒரு சவாலாக அமைகிறது. எனவே மன்னிப்பு வரையறைக்கு உட்பட்டதல்ல. இது ஒரு பரந்த விரிந்த செயற்பாடாகும். மன்னிக்கும் மனம் கடவுள் தன்மை கொண்டது. இம்மனம் ஒப்புரவை உருவாக்குகின்றது. இதன் விளைவு மகிழ்ச்சி "மன்னிக்கும் மனதிற்கு வாழ்வெல்லாம் மகிழ்ச்சி" என்ற முது மொழிக்கிணங்க மன்னிக்கும் மனம் கடவுளின் சித்தத்திற்கு அடிபணிந்து வாழவைக்கும். இதுதான் ஒப்புரவாகும்.

படைக்கும் பொழுது அனைத்தையும் நல்லதெனக் கண்டார் இறைவன். இந்த நன்மைத்தனம் ஒருவன் தன்னிலும், அயலவனிலும், இறைவனிலும் ஒப்புரவு கொண்டு, அயலவனின் குற்றத்தை மறந்து, மன்னித்து வாழ வழிவகுக்கின்றது. தன்னில் ஒரு குறையோ, பலவீனத்தையோ உணராத மனிதன், நிறைவான உள்ளத்துடன் இருக்கும் பொழுது ஏனையவர்களில் எதுவித குறையும் காணாமல், கண்டாலும் மன்னித்து நெருங்கிய உறவுடன் வாழுகின்றான். இவ்வாழ்வு அவனுக்கு மகிழ்ச்சியை நிரம்ப அளிக்கின்றது. இதனால் மன்னிப்பதும் மகிழ்ந்து வாழ்வதும் சுலபமாகின்றது.

இன்று நாம் வாழும் உலகை சுற்றும் முற்றும் நோக்கிப் பார்ப்போம். எங்கும் ஒரே சண்டை சச்சரவு, பிரிவினை, போர் முழக்கங்கள், ஏன் இவை எல்லாம்? எங்கிருந்து கேட்கின்றன? ஆம் மக்கள் இன்று மாக்களாக மாறிவிட்டனர். மனிதம் செத்து விட்டது. எப்பக்கமும் பகைமை உணர்வு, வெறுப்பு, விரக்தி, கோபம் போன்ற துர்க்குணங்கள் விஸ்வரூபம் எடுத்துவிட்டன. இந்நிலையில் எமக்கு எப்படி சமாதானம்! எவ்வாறு விடுதலை கிடைக்கும்? இவற்றிலிருந்து விடுபடத்தான் இந்த யூபிலி ஆண்டு ஒவ்வொரு மனிதக் கதவையும் பெயர் சொல்லித் தட்டுகிறது. எம் பாவ வாழ்வு, பகைமை உணர்வு என்பனவற்றிலிருந்து நாம் விடுபடும் போது தான் உண்மையான விடுதலை பெறமுடியும். இதற்கு எமக்கு அடிப்படையாக அமைவது மன்னிப்பு. "நாம் மன்னித்து விட்டோம்" என உதட்டால் மட்டும் கூறினால் போதாது. எம் உள்ளக்கதவுகளைத் திறந்து தவறு செய்தோரை ஏற்று, அவர்களது தவறை மறந்து விடுவது மனிதனது மகத்தான வாழ்வுக்கு வழி வகுக்கும். மன்னிப்பு பற்றி வேதாகமங்களில் பல இடங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் "ஒருவருக்கொருவர் பரிவும் இரக்கமும் காட்டுங்கள் கிறிஸ்துவுக்குள் கடவுள் உங்களை மன்னித்தது போன்று நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்" என ஆழமான கருத்துக்களைத் தந்துள்ளார். மன்னிப்பு அன்பின் வெளிப்பாடு எவ்வளவிற்கு எவ்வளவு அன்பு இருக்கின்றதோ, அவ்வளவிற்கு அவ்வளவு குற்றங்களைப்பாராது மன்னிப்பதற்கு வாய்ப்புண்டு. ஏனெனில் மன்னிப்பது மனிதபண்பு, மறப்பது இறைபண்பாகும். இதற்கு மத்தேயு நற்செய்தியாளர் சான்று பகர்கின்றார். "ஆண்டவரே! என் சகோதரன் எனக்கெதிராக குற்றம் செய்தால் நான் அவனை எத்தனை முறை மன்னிப்பது? ஏழு முறை வரைக்குமா?" என்று கேட்டார். அதற்கு யேசு "ஏழுமுறை என்றன்று, ஏழுமுறை எழுபதுமுறை மன்னிக்க வேண்டும் என உனக்குச் சொல்கின்றேன்" என்கிறார். எண்ணற்ற முறைகள் மன்னிக்க வேண்டும் என எமக்கு வலியுறுத்துகின்றார். அன்பிற்கு எவ்வாறு எல்லையில்லையோ அவ்வாறே மன்னிப்பிற்கும் எல்லையில்லை. எனவே மன்னித்து மறந்து வாழ்வது மூவொரு இறைவனின் பண்பு. அதை மனிதன் கடைப்பிடிக்க வேண்டுமென விரும்புகிறார்.

கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என அழைக்கப்படும் நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் வாழ்வை, அவரின் போதனைகளை எமது வாழ்வில் கடைப்பிடித்து வாழ்கின்றோம். ஆம்! அவ்வாறாயின் கிறிஸ்துவின் தாரக மந்திரமாகிய "மன்னித்து மறப்பதை" என் தனிப்பட்ட வாழ்வில், குடும்பத்தில், அன்பியத்தில், சமூகத்தில் கடைப்பிடித்து வாழ முனைந்துள்ளேனா? கிறிஸ்தவத்தின் ஆணிவேராகிய மன்னிப்பை மறந்துவிட்டு ஒரு போலிக் கிறிஸ்தவனாக வாழவில்லையா? என்னை ஏனையோர் பல தடவைகள் மன்னிக்க வேண்டும் என்று ஆவல் கொண்ட பொழுதும் நான் மற்றவனை ஒரு தடவையாவது மன்னித்து மறக்க முனைந்துள்ளேனா? இதற்கு மத்தேயு மன்னிக்காத ஊழியன் பற்றிய உவமையின் ஊடாக யேசுவின் நற்செய்தி வாக்கினைக் கூறுகின்றார். "உங்களுள் ஒவ்வொருவரும் தன் சகோதரனை முழு உள்ளத்தோடு மன்னிக்காவிடில் என் வானகத் தந்தையும் அவ்வாறே செய்வார்" என மன்னிப்பின் மகத்துவத்தை யேசு எமக்கு உவமை வழியாகப் புகட்டியுள்ளார். இதன் மூலம் மன்னிப்பதால் மன்னிப்பு பெற முடியும் என்ற அடிப்படை உண்மையை எடுத்துரைத்துள்ளார்.

எனவே அருள் தரும் புத்தாயிரமாம் ஆண்டில் நாமும் விடுதலை பெற விழித்தெழுவோம். எமது. தடைச்சுவர்களைத் தகர்த்தெறிவோம். பிரிவினையற்ற, ஏற்றத்தாழ்வற்ற, சுயநலமற்ற, ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப எம் பகைமைகளை மன்னித்து மகிழ்வோம், மறப்போம், முடிவில்லா வாழ்வை எமதாக்குவோம்.

### அழகு அழகு அழகு அழகு

கடலே உன் நீலம் அழகு
நதியே உன் வேகம் அழகு
காற்றே உன் ஓசை அழகு
மலரே உன் வண்ணம் அழகு
மழையே உன் சாரல் அழகு
நீரே உன் குணம் அழகு
மண்ணே உன் படைப்பு அழகு
உயிரே நீ உதித்தது அழகு
மனிதா உன் ஆன்மா அழகு
மொத்தத்தில் இறைவா நீ அழகு.

ம. டிலான், ஆலங்குளம் வட்டக்கண்டல்
ஆட்காட்டிவெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

**சிறுகதை**


## நிழல் தேடும் பறவை

யோகமணி தனது பெற்றேருக்கு ஒரு பிள்ளை. அவளை அவளது பெற்றோர் மிகவும் அன்பாக வளர்த்து வந்தார்கள். வறுமையான குடும்பம்தான். இந்த வறுமையின் மத்தியில் அவளைப் பாடசாலைக்கு அனுப்பி படிக்க வைத்தார்கள். யோகமணியின் தந்தை திடீரென விபத்தில் இறந்து விட்டார். தந்தை இறந்த கவலையினை அவர்களால் தாங்க முடியவில்லை. ஒருவாறு தாய்க்கு ஆறுதல் கூறி கவலையினை தேற்றிக் கொண்டாள். யோகமணியின் தாய் வேலைக்கு சென்றுதான் அவளைப் படிக்கவைத்தாள். காலங்கள் கடந்து உருண்டோடின. யோகமணி வளர்ந்து விட்டாள். இவளது தாய் இவளுக்கு ரவி என்னும் ஒருவரை மணம் முடித்து வைத்தாள். வறுமை என்றாலும் ரவி யோகமணியினை மிகவும் அன்போடு ஏற்றுக் கொண்டான். இவர்கள் ஓர் அன்புறவில் வாழ்ந்தார்கள். ரவி ஒவ்வொரு நாளும் கூலி வேலைக்குச் செல்வான். யோகமணியின் தாய்க்கு நோய் ஏற்பட்டு சில நாட்ங்களில் இறந்து விட்டாள். இந்த நிகழ்வினை யோகமணியினால் தாங்க முடியவில்லை. தன்னை வளர்த்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்த தாய் அல்லவா? ஒரு மாதமாக அழுதாள். ரவி அவளுக்கு ஆறுதல் கூறினான். இவ்வாறு இருக்கையில் மார்கழி மாதம் யோகமணிக்கு ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது. அவள் மார்கழியில் பிறந்ததால் அவளுக்க் மல்லிகா எனப் பெயர் இட்டனர். அக்குழந்தையை அவர்கள் மிகவும் அன்பு செய்தார்கள். குடும்பத்தில் கஸ்ரம் வந்தாலும் அவர்கள் காட்டிக் கொள்ள மாட்டார்கள். மல்லிகா மூன்று வயதை அடைந்து விட்டாள். அவளைப் பாலர் பாடசாலைக்கு அனுப்பினார்கள். இது இப்படி இருக்கயைில் சித்திரை மாதம் மீண்டும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவளுக்கு சித்திரா என்று பெயர் இட்டார்கள். அப்பொழுதுதான் ஒரு அரக்கன் அக்குடும்பத்தில் நுளைந்தான். ரவி வேலை முடிந்து வந்ததும் தன் இரு குழந்தைகளையும் அன்புடன் அணைத்து முத்தமிடுவான். அவர்களுடன் மகிழ்ச்சியுடன் கதைத்து விளையாடுவான். இவர்களுக்கு வறுமை என்றாலும் தங்களின் உழைப்பில் கிடைப்பவற்றைக் கொண்டு சமாளித்துக் கொள்வார்கள். இவ்வாறு ஒரு நாள் ரவி வேலைக்குச் சென்று நேரத்துடன் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தான். வந்தவுடன் தனது இரு குழந்தைகளையும் அணைத்து முத்தமிட்டான். பின்பு குளித்து விட்டு வந்து சாப்பிட்டு விட்டு களைப்பாக உள்ளது என்று சென்று படுத்து உறங்கி விட்டான். அவனோடு சேர்ந்து அவனுடைய இரு பிள்ளைகளும் உறங்கி விட்டார்கள் ஆனால் யோகமணி மட்டும் உறங்கவே இல்லை. அன்று தான் ஒரு பயங்கரமான நாள். எங்கேயோ ஓர் இடத்தில் இருந்து வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின. யோகமணி அவற்றை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் வெளியில் வந்து பார்த்தாள். அந்த நேரம் எங்கோ தொலைவில் இருந்து ஒரு ஷெல் வந்து அவள் குடிசையின் மீது விழுந்து வெடித்துச் சிதறியது. அவளது குடிசை பற்றி எரியத் தொடங்கியது. யோகமண்ியின் இதயத்தினுள்ளும் இடி இறங்கியதைப் போன்று இருந்தது. ஐயோ என் கணவர், என் பிள்ளைகள் என்று பதறினாள். அழுதாள், துடித்தாள், கடவுளே காப்பாற்றும் என்றாள். ஆனாலும் பயனில்லை. குடிசையை நோக்கி வந்து பார்த்தாள் தனது கணவன் ரவியும் மகள் சித்திராவும் இறந்து கிடந்தனர். மகள் மல்லிகா மட்டும் காயங்களுடன் உயிர் தப்பினாள். ஒரு கணம் மகளை இறுக அணைத்தபடி மீண்டும் விம்மி அழுதாள். அவள் என்ன செய்வதென்று தெரியாமல் தன் மகளைத் தூக்கிக் கொண்டு உறவினர்களிடம் சென்றாள். யாரும் அவளுக்கு புகலிடம் கொடுக்கவில்லை. துரத்தி விட்டனர். இந்த இரவு எங்கே செல்வேன் என்று யோசித்தபடி மகளுடன் நின்றாள். அப்பொழுது தொலைவில் ஒளி ஒன்று தெரிந்தது. அங்கே சென்று பார்த்தாள் அது வேறொன்றும் இல்லை மானிட மகன் இயேசு பிறந்த மாடடைத் தொழுவம். இந்தத் தொழுவத்தில் இயேசுவைத் தவிர தனக்கு யாரும் தஞ்சமில்லை என்று தன் மகளுடன் தானும் உறங்கிப் போனாள்.

*பி நிரஞ்சினி குரூஸ்*
*13,கலை தி.கு கன்னியர் மடம்*
*மன்னார்*

# இறைபணி தொடரக் குருத்துவம் அடைகின்றார்

## அருட் பணி. யூட் வில்சன்



யாழ் சில்லாலைக் கிராமத்தைச் சேர்ந்த அருட் பணியாளர் அ.யூட் வில்சன் (புனித ஆசீர்வாதப்பர் சபை) அவர்கள் 21.12.2000 அன்று காலை 10.00 மணிக்கு கண்டி ஆயர் அதி வண.ஜோசப் வியாணி பெனாண்டோ ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் தனது முதற் திருப்பலியை 23.12.2000 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுத்தார். இவர் திரு.திருமதி அருளானந்தம் தம்பதியினரின் இளைய புதல்வர் ஆவார். 07.04.1971 ல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் சில்லாலை றோ.க.த.க பாடசாலையிலும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் உயர் கல்வியை வவுனியா மகா வித்தியாலயத்திலும் கற்றார். 1991 ஆம் ஆண்டு கண்டி புனித ஆசீர்வாதப்பர் சபைக் குருமடத்தில் தனது ஆரம்பக் குருத்துவப் பயிற்சியை மேற் கொண்டு தனது முதல் வாக்குத தத்தம் செய்து 29.09.1994 ல் பெற்றார். மெய்யியல், இறையியல் கல்வியை கண்டி தேசியக் குருமடத்தில் சிறப்பாக நிறைவு செய்து 02.09.2000 ஆண்டில் நித்திய வாக்குத் தத்தத்தையும் 05.10.2000 அன்று திருத் தொண்டராகவும் கண்டி ஆயர் அவர்களால் திரு நிலைப் படுத்தப் பட்டார். புதிய அருட் தந்தையின் பணி சிறக்க வாழ்த்துகிறோம். (ஆ-ர்)

# இதயத்தால் இணைந்திடுவோம்

## இருட்டில் ஏன் நிழல் தேடுகின்றாய்?

என் மனமே! வாழ்க்கையை வடிக்கும் வைரக் கலமே
மனமே! மண்ணை விட்டு நான் மறையும் முன்
உண்மையின் தேடலில் உன்னை உருக்கு
உண்மையே உன் உச்சத்தை உடைத்துக் காட்டு.
காலத்தால் நான் கல்லறைக்கு நடக்கின்றேன்.
ஆண்டவா அங்கு நான் சேரும் முன்
உன்னை நான் உள்ளத்தால் உணர வேண்டும்.

அரசியல் அதிகாரமே! ஆக்க வேண்டியதை
அழித்துக் கொண்டிருக்கின்றாய்.
திருத்தவேண்டியவர்களைத் திருடிக் கொண்டிருக்கின்றாய்
உங்கள் உள்ளத்தின் பள்ளத்தில் ஏன்
பாலைவன ஆறுகளைப் பாய விட்டீர்கள?
நாணயமான இடத்தில் அல்லவா நீங்கள்
நரகம் நடத்துகின்றீர்கள்.
கழுவிய நீரில் நழுவிய மீனாய்
காலத்தைக் கரைக்கிறீர்கள்.
உள்ளமே உன்னில் உண்மையைத் தேடு
நன்மையால் நீதி வரும் நம்பியிரு.

அதிர்ச்சியின் சிலுவையில் அறையப் பட்டவர்களே!
ஆக்கிரமத்தின் ஆணியால் அடித்துக் கொண்டவர்களே!
ஆண்டவர் சிலுவையை அண்ணார்ந்து பாருங்கள்.
கல்வாரி காட்டாப் பாடத்தைக் கற்கும் வரை
கறுப்பான வாழ்க்கைக்கு விளக்கும் இல்லை
இலக்கும் இல்லை.

மனமே மனத்திரையை திறக்க மாட்டாயா?
மனிதத்தை புனிதத்தை மாட்ட வேண்டிய இடத்தில்
மாட்டக் கூடாதா மதிப்பீட்டை ஏன் மாட்டுகின்றாய்?
உண்மையே உன்னை உதாசீனம் செய்வதேன்?
மனிதனாய் மறுபடியும் நான் பிறப்பதை நிறுத்திவிடு.
உன் பிறப்பை உணராத உள்ளங்களுக்கு உயிர் தா..
*அருட் சகோ ஜெகானந்தன், தேசிய குருமடம், கண்டி*

## அன்பு

அன்பின் தெய்வமே இறைவா!
இப் பாரினில் அன்பு மலர்ந்திட
அன்புடன் நாம் வேண்டுகின்றோம்.

அன்புள்ளங்கள் எம்மை விட்டுப் பிரிந்தன
கைவிடப்பட்ட ஊனர்கள் ஆனோம்
தாழ்மை உணர்வுடன் வாழ்ந்திடும் எமக்கு
தயவுடன் தருவாய் உனது அன்பை

இவ்வுலக செல்வத்திற்கு ஆசைப்பட்டு
ஏழைகளின் உரிமைகள் பறிக்கப்படும்
நிலையதனை மாற்றி நீதியைக் காட்டும்
உள்ளங்கள் பொங்கிட வேண்டுகின்றோம்.

நானே அதிகாரம் உள்ளவன் என்னும் அரசியல்
நிலையால் தன் உறவுகளை அழிக்கும் நிலை மாறி
அனைவரையும் அன்புடன் நோக்கும்
பரந்த உள்ளம் என்னில் பிறக்கட்டும்
*மு. அன்ரனிற்றா, கற்கிடந்த குளம், முருங்கன்*

## சிறப்பு

அன்பு ஒரு அழியாப்பூ
அது கொள்ளாது இறுமாப் பூ
அள்ள அள்ள குறையாப் பூ
அகிலத்தையே ஆழும் பூ
அன்புக்கு ஏது அடைப்பு
அது கொடுக்குமே மன்னிப்பு
அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் இதயப்பூ
இருந்தால் வரும் களிப்பு
அயலானை அணைத்துக் கொள்ளும் கரப்பு
எல்லோருக்கும் இருந்தாலே வியப்பு
அன்புப் பணி வாழ்விலே
கிறிஸ்துவுக்கு சாட்சியாய் இருப்பதே சிறப்பு
*அ. மேரிசுஜோ, இறம்பைக்குளம்*

## எப்போது வந்தாய்

காற்றோடு
காற்றாய் வந்தாயா?
கண்ணீர் சிந்தும் மக்களை
இறை பதம்
அழைத்துச் செல்ல வந்தாயா?

சமாதானம் என்ற
சாக்கடை வார்த்தையை
சாட்டை கொண்டு
விரட்டியடிக்க வந்தாயா?

உறவுகளைத்
தொலைத்திட்ட
உள்ளங்களுக்கு
ஆறுதல் சொல்ல வந்தாயா?

## கடவுள் யார்? தீயணைக்கும் கருவி!

மனிதனே நீ நினைக்கின்றாய் கடவுள் தண்டிப்பவர் என்று! அதனை தினம் தோறும் நினைத்து வேதனைப் படுகின்றாய், துன்புறுகின்றாய், அலறுகின்றாய், பரிதவிக்கின்றாய். ஆனால் அந்தக் கடவுள் அப்படியல்ல. இரக்கம் உடையவர். உலக மக்களினங்களின் பாவக் குற்றங்களை மன்னிப்பவர் என்ற கருத்தினை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதனை நாம் எப்போது உணரப் போகின்றோம்? எப்போது ஏற்று வாழப் போகின்றோம்? மனிதா நீ என்ன செய்கின்றாய்? பல தான தருமங்கள் செய்கின்றாய். மாதத்தில் பல நோன்புகள் இருக்கின்றாய். நீ எதற்காக இந்த வெளி வேடச்செயல்களைச் செய்கின்றாய்? கடவுள் தம் அருங் கொடைகளைப் பொழிவார் என்று தானே? ஆனால் கடவுள் உன் நன்மைத் தனங்களால் குளிர்பவர் அல்ல. மாறாக, அவர் இரக்கத்தால்தான் நாம் நன்மைகளைப் பெறுகின்றோம். ஆசீர்வதிக்கப்படுகின்றோம். எனவே, எமது துன்ப துயரங்களாகிய நெருப்பு என்னும் தீயை அணைப்பவராக எமது வாழ்க்கையில் அவரைக் காண்கின்றோம்.
*சூ.அ.காந்தன்*
*கடலேரி வீதி, மன்னார்.*

## சிரிக்க சில...

மேடைப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் இருவர் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

ஒருவன்: ஏண்டா இவர் பேசும்போது வாயைத் துடைச்சுத் துடைச்சுப் பேசுறார்?
மற்றவர்: அதாவது பேசும்போது வாய் சுத்தம்வேணும் என பெரியோர்கள் பலர் கூறியதை இவர்தான் சரியாகக் கடைப்பிடிக்கிறார்.

---

சுமதி: ஏ. மாலா என்ன இங்க நிக்கிற? என்ன விசயம்?
மாலா: என்னோட மாமியாரை பஸ் ஏத்திவிட வந்தேன்
சுமதி: எந்த பஸ்?
மாலா: பிரேக் பிடிக்காத பஸ் எது வந்தாலும் ஏத்திவிடலாமுண்னு காத்துக் கொண்டிருக்கிறேன்

## வினா இங்கே. விடை எங்கே?

1) கலியாண வீட்டில் வாழை மரம் கட்டுவது ஏன்?
2) மூன்று எறும்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. வழியில் கற்கண்டு கிடந்தது. இரண்டு எறும்புகள் அதில் ஏறிக் கொண்டன. மூன்றாவது விலகிச் சென்றது ஏன்?
3) இரண்டு கழுதைகள் ஒன்றன் பின் ஒன்றாகச் சென்றன. பின்னே சென்ற கழுதை தானே முன்னே செல்வதாகச் சொன்னது. அது என்ன சொன்னது?

விடை:*இதே பத்திரிகையில் எங்கோ ஒரு இடத்தில் உள்ளது தேடிக் கண்டு பிடிக்கவும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச் செய்திகள்

## மடுவில் இளைஞர் யூபிலி

29-10-2000 காலை இளைஞர் யூபிலியை சிறப்பிக்கும் முகமாக அருட்தந்தை ஞானாதிக்கம் அடிகளார் தலைமையில் திருப்பலி இடம் பெற்றது. இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள் அனைவரும் பலியில் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். அருட்தந்தை தனது மறை உரையில் இளைஞர்களின் முக்கிய பணி இறைவார்த்தையை எடுத்துச் சொல்லி இளைஞனான கிறிஸ்துவின் பாதையில் செல்வதே என்று எடுத்துக்கூறினார். திருப்பலி முடிவடைந்ததும் 10.30 மணியளவில் எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து எமது துவிச்சக்கரவண்டியில் சின்ன பண்டிவிரிச்சான் புனித சவேரியார் ஆலையத்துக்குச் சென்றோம். எம்மைக் கண்டதும் சின்ன பண்டிவிரிச்சான் இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள் எம்மை வரவேற்று எமது களைப்பை [illegible] குளிர்பானம் தந்தார்கள். சிறிய மணித்துளிகள் கடந்ததும் பெரிய பண்டிவிரிச்சான் இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள் அவர்களுடைய பங்குத்தந்தை மாக்கஸ் அடிகளாருடன் வருகை தந்தார்கள். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து மதிய உணவு உண்டோம். பின்னர் எமது நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. முதலில் விரும்பியோர் முன் வந்து பாடல்கள் பாடினார்கள். அதனைத் தொடர்ந்து பாட்டுக்கு பாட்டு, குழு நிகழ்ச்சிகள், பார்சல்பாசிங் என்பன இடம் பெற்றன. சிறு செபத்துடன் 6.00 மணியளவில் வானத்தில் பறந்து வீடு சேரும் சிட்டுக் குருவிபோல் எமது துவிச்சக்கர வண்டிகளில் மடுத்திருப்பதியை வந்து சேர்ந்தோம்.

*இளைஞர் ஒன்றியம் உறுப்பினர்*
*ம. ஆன். ஜிவராணி, மடு.*

## முத்தரிப்புத்துறை பங்கில் மறைக்கல்வி தின விழா

30-10-2000 அன்று மாலை முத்தரிப்புத்துறைப் பங்கில் மாபெரும் மறைக்கல்வி விழா சிறப்பாக இடம் பெற்றது. இவ் விழாவானது முத்தரிப்புத்துறை பங்குத்தந்தை யூட் குருஸ் அடிகளாரால் நெறிப்படுத்தப்பட்டது. அருட்சகோதரன் லக்கோஸ் பிகிராடோ அவர்களின் உதவியுடன் கலை நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. அதில் பங்குத் தந்தையினால் மறைக்கல்வியின் நோக்கம் பற்றி உரை வழங்கப்பட்டது. ஒவ்வொரு நிகழ்வும் மறை வாழ்வையே நோக்கமாக கொண்டு அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

*செ. செல்வராணி கூஞ்ஞ.*
*முத்தரிப்புத்துறை.*

## நலன் புரி நிலையத்தில் மறைக்கல்வி விழா

பேசாலை நலன்புரி நிலையத்தில் வாழும் விடத்தல்தீவு பங்கு மக்கள் புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் 28-10-2000அன்று மறைக்கல்வி விழாவைக் கொண்டாடினார்கள். அன்றைய தினம் மாலை 6 மணிக்கு அருட்தந்தை ரெட்ணராஜா தலைமையில் அருட்தந்தை பிரசன்னா அவர்களும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். திருப்பலி ஆரம்பத்தில் மறையாசிரியர்கள் பவனியாக வேதாகமத்தை ஏந்திப் பலிப்பீடம் வந்து அரங்கேற்றி வைத்தனர். திருப்பலி முடிவடைந்ததும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவை சிறப்பிக்க குருமுதல்வர் அருட்தந்தை சேவியர் குருஸ், அருட்தந்தையர்கள் வின்சன் பற்றிக், ரெட்ணராஜா, சீமான், பிரசன்னா அருட்சகோதரிகள் பொஸ்க்கோ, றோஸ்மேரி ஆகியோரும் வருகை தந்திருந்தனர். அருட்தந்தையர்கள உரையாற்றுகையில் பெற்றோரே முதல் மறையாசிரியர்கள் என்றும் மறைக்கல்வி எல்லோரையும் ஒழுக்க சீலர்களாக்குகிறது என்றும் மறைக்கல்வி பாடசாலை மாணவர்களை மட்டுமல்ல எல்லோருக்கும் அவசியம் என்றும் அது வாழ்க்கை முழுவதும் தொடரப்பட வேண்டிய ஒன்று எனவும் அதன் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் தெளிவுற விளக்கினார்கள்.

விழாவினைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும், வில்லுப் பாட்டும் இடம் பெற்றன. அன்றைய தினத்தில் மகிழ்ச்சியாக சிறந்த முறையில் மறைக்கல்வி விழா கொண்டாடப் பட்டது.

*திருமதி.எ.அற்புதராணி*
*மறைப்பணியாளர்,*
*விடத்தல்தீவு நலன்புரி நிலையம்*
*பேசாலை.*

## பங்குத் திருவிழாக்கள்

பேசாலை புனித வெற்றிநசாயகி ஆலயத் திருவிழா கடந்த 8.12.2000 அன்று இடம் பெற்றது. பள்ளிமுனை புனித லூசிய ஆலயத் திருவிழா கடந்த 13.12.2000 அன்று இடம் பெற்றது. கீளியன் குடியிருப்பு புனித சவேரியார் ஆலயத் திருவிழா கடந்த 03.12.2000 அன்று இடம் பெற்றது. இத் திருவிழாக்களை ஒட்டிய ஆயத்த வழிபாடுகள் பங்கின் ஆன்மீக புதுப்பித்தலுக்கான சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது குறிப்பிடத் தக்கது.

## மருத மடுவில் அருட் சகோதரர்கள

22.08.2000 அன்று தமது விடுமுறையைக் கழிப்பதற்காக மன்னார் அருட் சகோதரர்கள் மருதமடுக் கிராமத்திற்கு வருகை தந்தனர். இவர்கள் இங்கு தங்கியிருந்த நாட்களில் வீடுகளைத் தரிசித்து மக்களை உற்சாகப் படுத்தினர். அருட் சகோதரர்கள் கிராமத்தில் தங்கியிருந்த நாட்களை தங்களால் மறக்க முடியாது என இக் கிராம மக்கள் மகிழ்ச்சியோடு கூறினர்.

*கில்டா. ரஞ்சனி*
*மருதமடு*

## மடுவில் மறைக்கல்வி வாரம்

முதல் நாள் நிகழ்வாக ஐப்பசித் திங்கள் 30ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு வலயங்களில் அன்பிய வழிபாடுகள் இடம் பெற்றன. இரண்டாம் நாள் சேமக்காலையில் சிரமதானம் செய்யப்பட்டது. மூன்றாம் நாள் வீடுகளிலும் வைத்திய சாலைகளிலும் உள்ள நோயாளர்களைத் தரிசித்து வழிபாடுகள் நடாத்தப்பட்டன. நான்காம் ஐந்தாம் நாள் விவிலிய விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன. ஆறாம் நாள் கொடி விற்பனையும் மாலையில் கெபியில் செபமாலையும் இடம் பெற்றது. இறுதி நாள் நிகழ்வாக அருட் தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளாரின் சிறப்புத் திருப்பலியுடன் மறைக்கல்வி விழா இனிதே நிறைவுற்றது.

*மறைவாழ்வுப் பணியாளர் ஒன்றியம*

## வாழ்த்துரை

புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உதை பந்தாட்ட அணியினர் தேசிய ரீதியில் முதல் இடம் பெற்று வெற்றியீட்டிய செய்தியை மன்னாவில் பிரசுரித்திருந்தோம். அவ் வெற்றியைப் பாராட்டி மன்/ஆண்டாங்குளம் றோ.க.த.கா. வித்தியாலயம் சவேரியார் கல்லூரியின் வெற்றி நாயகர்களுக்கு அன்போடு வாழ்த்துச் செய்தி அனுப்பி உள்ளனர். அச்செய்தியின் ஒரு பகுதி. இவ்வாறு அமைகின்றது.

*"மன்னாரின் பெருமைக்கோர் பெருமை சேர்த்த கல்லூரி - அந்தப் பொன்னான வீரர்களுக்கோர் புகழாரம் சூட்டுகின்றோம் .*
*விண்ணதிர வெடி கொழுத்தி எம் வீரர்களை வரவளைப்போம்*
*கண்ணெதிரே வரவழைத்து கவி மழையாய்ப் புகழ்ந்திடுவோம்"*

என்று தொடர்கிறது...இப் பாராட்டு.

## பெரிய குஞ்சுக் குளம் ஆலயப் பொன்விழா

பெரிய குஞ்சுக் குளம் புனித அங்கா முத்து மாதா ஆலயம் புனரமைக்கப்பட்டு 50 ஆண்டு நிறைவை ஒட்டிய பொன் யூபிலி விழா 20.12.2000 அன்று இடம் பெற்றது. மன்னார் ஆயர் மேதகு ஜோசேப்பு ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அன்பு விருந்தும் இடம் பெற்றது. பங்கு மக்கள் உற்சாகமாக இந் நிகழ்வுகளில் பங்கேற்றனர்

## சமாதானக் கருத்தரங்கு

மன்னார் மறைக் கோட்ட சமாதானக் குழுக்களுக்கான கருத்தரங்கு 18.12.2000 அன்று புனித செபஸ்தியார் பேராலயப் பங்குப் பணிமனை மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் மன்னார் மறைக் கோட்டத்தைச் சார்ந்த பங்குகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அருட் தந்தை விக்டர் சோசை மற்றும் வின்சன் பற்றிக் அடிகளார் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

# கண்ணீர் அஞ்சலி

முருங்கன் பங்குத் தந்தையும் முருங்கன் மறைக் கோட்ட முதல்வருமான அருட் பணியாளர் தேவசகாயம் பிள்ளை அடிகளாரின் தந்தையார் திரு யக்கோப்பிள்ளை அவர்கள் தனது 83 ஆவது வயதில் 13.12.2000 அன்று இறை பதம் அடைந்தார். இவருடைய இறுதிக் கிரிகைகள் சூரிய கட்டைக் காட்டில் இடம் பெற்றது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம். இவருடைய பிரிவால் துயருறும் எம் சகோதரக் குரு தேவசகாயம் பிள்ளை அடிகளாருக்கும் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது அனுதாபங்களையும் செபங்களையும் சமர்ப்பித்து நிற்கின்றோம்.

# வாசகர் எண்ணங்கள்

## நன்றி, நன்றி

அன்பின் அருட் தந்தைக்கு நீங்கள் செய்யும் மாபெரும் பணிக்கு எமது மனமார்ந்த நன்றிகள். நாங்கள் மாதத்திற்கு ஒருமுறை பார்க்கும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை மன்னாதான். அதன் மூலம்தான் நமது மறை மாவட்டத்தில் என்ன நடக்கின்றது என்று அறிகின்றோம். இந்த உதவிக்கு மீண்டும் மீண்டும் என் நன்றிகள். மன்னா எங்கள் கையில் கிடைக்கும்போது நாங்கள் அடையும் மகிழ்ச்சியை எந்த வார்த்தைகளில் எழுதுவது என்றே தெரியவில்லை.. . . .

அருட் சகோ.சுரேஸ், உரோம்

## வாழ்க மன்னாவே பல்லாண்டு

உடைந்து போன என் உள்ளத்திற்கு நல் சக்தி அளிக்கும் "உளி" எமக்கு புதிய வாழ்வை தருகின்றது. அன்புக்கு அண்ணாவாக இருக்கும் உளியின் எழுத்தாள் அண்ணாவே உங்களுக்கு எனது நன்றிகள். அத்தோடு கத்தரீன் கதை உலக ஆசைகளை விட்டு வாழவும் சாத்தானை வெல்லும் முறையையும் அழகாக சொல்லித் தருகிறது. வாழ்த்துக்கள்.

*J . லதா*
*சின்னக்கரிசல், மன்னா ஊக்குவிப்பாளர்.*

## வானத்தைப் போல வளர...

என் மரியாதைக்கும் வணக்கத்துக்கும் உரிய மன்னா ஒருங்கமைப்பாளர் அவர்களுக்கு. உங்கள் திறமையும் மன்னாவும் கடலை விடப் பரந்து காணப்படுகிறது. பரப்பால் மட்டுமல்ல கடலின் ஆழம் போலும் மிக ஆழமான கருத்துக்களை வெளியிடுகின்றீர்கள். உலகில் எத்திசையிலும் உருவாகும், நடந்து முடிந்த செய்திகளை வீட்டில் இருந்தே அறியக் கூடிய வசதிகளை ஏற்படுத்தி தருகின்றீர்கள். கடலைப் போலன்று வானத்தைப் போன்று வளர வாழ்த்துகின்றேன்

செ. மேரி. ஜெனிற்றா (றொக்சி)
மாளிகைத் திடல், அடம்பன்.

## மன்னா பற்றி சில வரிகள்..

புதுப்பொலிவோடு வருகின்ற மன்னாவை இங்கு பலர் பாராட்டுகின்றனர். மன்னா பல செய்திகளை (பொது அறிவு, அரசியல், கவிதை, ஏனைய மறைமாவட்ட செய்திகள் போன்றவற்றை) சுமந்து வருவது பாராட்டுக்குரியது. மன்னாவின் வடிவமைப்பு, அச்சுப் பதிப்பு மற்றும் பொருத்தமான படங்கள் மேலும் மன்னாவை மெருகூட்டுகிறது. இன்னும் மன்னாவை மெருகூட்ட இடமுண்டு.

*அன்புடன்*
*அருட் பணி. பொன்ஸியன் அமதி*
*யாழ்ப்பாணம்.*

## நற்செய்திப் பணியாளன் மன்னா

மன்னாரில் உதயமாகும் மன்னாவே உன்னை மனமார வாழ்த்துகின்றேன். பல மக்களின் சிந்தனைகளை உள் வாங்கி பல திசைகளிலும் பறக்க விட்டு எத்தனையோ உள்ளங்களைக் கவர்ந்திட்ட மன்னாவே உன்னை எப்போது காண்போம் என ஆவல் கொள்ளச் செய்திட்டாய். மன்னாவே, நீ வெறும் காகிதமல்ல. மக்களின் ஆன்மீக தாகம் அறிந்து தாகம் தீர்க்கும் நீரூற்று. நீ பல அரிய அறிவுரைகளையும் நற் சிந்தனைகளையும் நற்செய்திகளையும் அறிவிக்கும் ஒரு மாபெரும் பயனாளியாக மாறிவிட்டாய். உன் சேவை வளர உன் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

*எஸ். பெனிற்றா, மறைத் தொண்டர்*
*கள்ளியடி.*

## பெரும் பணி வளர்க

கத்தோலிக்கரின் இதயங்களில், வயது வேறுபாடின்றி இடம் பிடித்த எம் இனிய மன்னாவே! மாதா மாதம் நீ எமது கைகளில் தவழாவிடில் எம் நெஞ்சங்கள் வாடி விடுகின்றன. உனது இனிய நறுமணம் ஏனைய மாவட்டங்களை மட்டுமல்லாது, உலகளாவிய ரீதியிலும் கூட செல்கிறது. (செந்தமிழ்த் தென்றல் கவிஞர் அமுது, இலண்டன் - அவர்களின் பாராட்டுரையைப் பார்த்தேன்) அனைத்துத் தமிழ் பேசும் இதயங்களையும் கவர்ந்து இழுத்து விட்டதை நினைக்க எம் நெஞ்சங்கள் நெகிழ்கின்றன. "மறை மாவட்டச் செய்திகள், சிறுவர் பொழிவு, இளைஞர் பொழிவு, அரசியல் அரங்கம், பங்குச் செய்திகள், ஏனைய பல சிறப்புச் செய்திகள், அறிவித்தல்கள்" என அனைத்து விடயங்களையும் உலகளாவிய ரீதியில் அலசி ஆராயும் உனது சிறப்பியல்பு எம் அனைவரையும் கவர்ந்து உன்பால் ஈர்க்கின்றது. உனது இம் மகத்தான வளர்ச்சிக்கு ஆசிரியரின் அளப்பெரிய பணியும் ஆற்றலும், ஏனைய பணியாளர்களின் ஒத்துழைப்புமே காரணம் என்பதை அறியக் கூடியதாக உள்ளது. இம் மாபெரும் பணி தொடர்ந்தும் இனிதே வளர எமது உளங்கனிந்த வாழ்த்துக்களும், இறை ஆசீர்களும் என்றும் உரித்தாகுக!

*திருமதி. ஜெனிவி ஜெரால்ட் அல்மேடா*
*சின்ன பண்டி விரிச்சான்,*
*மடுக்கோவில்.*

## தரிசனம் தரிசனம்

மன்னா உன் தரிசனம்
எப்பொழுதும் உன் தரிசனம்
எல்லா நேரத்திலும் உன் தரிசனம்
ஓடும் எந்தன் வாழ்வில் உன் தரிசனம்
மனிதர்களுக்கிடையே உன் தரிசனம்
நண்பர்களிடையே உன் தரிசனம்
ஏழைகளின் சிரிப்பினிலே உன் தரிசனம்
அனைவரிலும் உன் தரிசனம்
இன்பங்களிலும் உன் தரிசனம்
நண்பர்களில் உன் தரிசனம்
பங்குகளில் உன் தரிசனம்
மறை மாவட்டங்களிலும் உன் தரிசனம்
உலகெல்லாம் உன் தரிசனம்
எப்பொழுதும் எங்கள் வாழ்வில் உன் தரிசனம்

*ரி. றெமீசியஸ் லெம்பேட், மன்னார்*

# எமது சிறப்பான நன்றிகள்

அன்பின் வாசகர்களே! வழமையான அம்சங்கள் இம்முறை மன்னாவில் இடம்பெறவில்லை. புதிய வருடத்தில் பல புதிய அம்சங்களோடு மன்னா வழியாக உங்களை சந்திக்க இருக்கின்றோம். கடந்த வருடத்தைத் திரும்பிப் பார்க்கையில் நெஞ்சம் நிறைந்த நன்றி உணர்வே எமக்கு ஏற்படுகின்றது. பல நல்ல உள்ளங்கள் தியாக சிந்தையோடு எமது பணிக்கு கரம் கொடுத்தனர், ஊக்குவித்தனர், உற்சாகப்படுத்தினர். சிறப்பாக எமது அன்புக்குரிய ஆயர், குருமுதல்வர், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், இறை மக்கள் அனைவரையும் அன்போடு நினைக்கின்றோம். *சிறப்பாக மன்னா பத்திரிகையை கணனியில் வடிவமைத்து இரவு பகலாக பணி செய்யும் - இளைஞர் பொழிவின் உளி தொடரை எழுதி வரும் அன்புக்குரிய சகோதரன் பிரான்சீஸ் நெல்சன் அவர்களையும் கொழும்பில் இப்பத்திரிகையை அச்சுப் பிரதியாக்கி கொண்டு வரும் வாழ்வுதய அச்சக மேலாளர் அன்புக்குரிய அங்கிள் றெஜீஸ் அவர்களையும் கிறிஸ்தவ மறை அறிவு வினாக்களைத் தொகுத்து வேதாகம குறுக்கெழுத்துப் போட்டியை அமைத்துத் தரும் அருட் சகொதரி கனிசியஸ் அவர்களையும் சிறப்பாக நன்றியோடு நினைக்கின்றோம். மற்றும் பங்குகளில் பத்திரிகையை வினியோகம் செய்யும் இறை மக்கள் பணியாளர்கள் அனைவருக்கும் எமது சிறப்பான நன்றிகள். -ஆசிரியர்*

## உங்கள் தொடர்புகளுக்கு

கீழே உள்ள இரண்டு முகவரிகளுள் ஏதாவது ஒன்றுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்

**அலுவலக முகவரி**
பதிப்பாசிரியர்
"மன்னா"
திருமறைப் பணி நிலையம்
புனித செபஸ்தியார் வீதி
மன்னார்

**OFFICE ADDRESS**
The Edtior
"MANNA"
Pastoral Centre
St. Sebastian's Street
Mannar.

**வதிவிட முகவரி**
பதிப்பாசிரியர்
"மன்னா"
பங்குப் பணிமனை
புனித லோறன்சியார் ஆலயம்
தலைமன்னார்

**RESIDENTIAL ADDRESS**
The Edtior
"MANNA"
Parish House
St. Lawrence Church
Talaimannar

## முக்கிய அறிவித்தல்

மன்னாப் பத்திரிகையை தனிப்பட்ட முறையில் தபால் மூலம் பெற விரும்புகின்றீர்களா? தபால் செலவு உட்பட ஆண்டுச் சந்தாவாக ரூபா 150/= ஐ காசுக் கட்டளை மூலம் எமக்கு அனுப்பி வைத்தால் மன்னா உங்கள் இல்லம் நாடி வர வழி செய்வோம். (ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் புனிதமாக புனிதன் மனிதனானார்

"நீ அழுகையை நிறுத்து,
கண்ணீர் வடிக்காதே. ஏனெனில்
உனது உழைப்புக்குப்
பயன் கிடைக்கும்.
உன் எதிர்காலத்தைப்
பொறுத்த மட்டில்
நம்பிக்கை உண்டு.
உன் பிள்ளைகள்
தம் நாட்டிற்குத் திரும்புவர்"
(எரே.31:16-17)



### சின்க் குழந்தையே

சின்னக் குழந்தையே வண்ணக் குழந்தையே
உன் எண்ணம் சொல்லு நல்ல குழந்தையே
மின்னும் உலகிலே உண்மை எதுவென
உரத்துச் சொல்லு சின்னத் தலைவனே

நீதி இங்கு சதியானது
வீதி எங்கும் புதிதானது
நாதிகள் கதை போனது
பாதி வாழ்வு சிதையானது
கரங்கள் உயர்த்திடு குழந்தையே - தீமை
சிரங்கள் வீழ்திடப் போரிடு

உண்மை உலையாகி வெந்தது
புன்மை கலையாக வந்தது
அன்பு அளவோடு நின்றது
வன்கன் அளவின்றிச் சென்றது
கரங்கள் உயர்த்திடு குழந்தையே - தீமை
சிரங்கள் வீழ்திடப் போரிடு

*விமல் அமதி*
*அம்பிட்டியா, கண்டி*





### மன்னார் மறை மாவட்டக் குரு முதல்வரின் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தி



கிறிஸ்து உலகிற்கு வந்தது மக்களுக்கு விடுதலை அளிப்பதற்காக. முழு மனித விடுதலையை அளிப்பதற்காகா. இந்த விடுதலையைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் தங்களுடைய பங்களிப்பை வழங்க வேண்டும். இறை அரசின் பண்புகளை தமது இல்லங்களில் வாழ்வதன் ஊடாகவே இப்பங்களிப்பைச் செய்ய முடியும். நீதிக்காக, சமாதானத்திற்காக உழைப்பதன் ஊடாக இயேசு கொண்டு வந்த முழு மனித விடுதலையை அனைவரும் அனுபவிக்கும் படி செய்வோம். உங்கள் அனைவருக்கும் எனது கிறிஸ்மஸ் புதுவருட நல் வாழ்த்துக்கள்.

### மறுபடி ஒருநாள் திரும்பி வருவாய்....

பி.நெல்சன்
எழுத்தார்

நீ தேடும் அமைதி பூமியிலே இல்லையென்று
விண் விட்டு மறு கிரகம்
ஏகினாயோ வெண்புறாவே
காலங்கள் விதித்திட்ட
கட்டளையின் பயனாக சூரியக் குடும்பத்தில்
பூமியைத் தெரிந்திட்டோம்.
விஞ்ஞானம் வளர்ந்துவர
அறிவதுவும் பெருகிவர
தோன்றிட்ட பெரியவர்கள் பூமியை சுற்றினர்
புதினங்கள் படைத்தனர்.
ஆதியில் தோன்றிய அற்புத மனிதனவன்
ஆறாகி நூறாகி ஆல்போலத் தழைத்தான்.
வேரோடு சேர்த்து விழுதையும் விட்டான்.
பொழுதுகள் புலர்ந்தன நாட்களும் நகர்ந்தன.
மாதங்கள் கரைந்து ஆண்டுகள் தோன்றின
பெருக்கமுற்ற மனிதன் இறுக்கமுற்றான் உலகினிலே.
பயந்தான் வியந்தான். படர்ந்தான் உலகெங்கும்.
நதிவழியே திரிந்தான் நடையாய் நடந்தான்
நாட்டோரமகன்று காட்டில் ஒரு வீடமைத்தான்
அதை குறிஞ்சி என்றான் தன் உரிமை என்றான்
கடலோரம் வந்து கடலில் கரையில் ஒரு வீடமைத்தான்
நெய்தல் என்றான் அதுவும் தன் உரிமை என்றான்.
பிறிதொருவன் வந்தான் வயல்வெளியை தனதென்றான்
மருதமென்று பெயர் வைத்து மகிழ்வாக வாழ்ந்திருந்தான்.
இன்னொருவன் வந்தான் மலையிடையே அமர்ந்தான்
இதற்கும் ஒரு பெயர் உண்டு முல்லை என்று அங்கிருந்தான்.
எஞ்சியவன் சென்றான் தனக்கொரு இடமென்றான்
இடமிடமாய் அலைந்தான் நிலம் நிலமாய் திரிந்தான்.
இருப்பவனோ ஏற்கவில்லை இடமளித்துக் காக்கவில்லை.
வெறுப்படைந்த எஞ்சியவன் மணலான இடம்பார்த்து
மண்டியிட்டு அழுது நின்றான் மணல் நிறைந்த அவ்விடமே
தன்னுரிமை என்றுரைத்து பாலை என்று பெயர் வைத்தான்
அவரவர்க்கு உரிய இடம் அவரவர்க்கு கிடைத்திருக்க
அமைதியான பூவுலகம் அமைந்ததன்று வெண்புறாவே.
அரக்கத்தன ஆசை ஒன்று அனைவருள்ளும் புகுந்து விட
அமைதியற்ற உலகில் இன்று அழிகின்றோம் வெண்புறாவே.
பாலைக்காரன் முல்லை சென்றான்
முல்லைக் காரனோ நெய்தல் என்றான்
நெய்தலில் உள்ளவன் குறிஞ்சியைப் பார்க்க
குறிஞ்சியில் உள்ளவன் தாவினான் மருதம்
மருதத்தில் உள்ளவன் விரிசல் கண்டான் தாவியே சென்று
தாக்கினான் பகைவனை.
அன்பன் அந்நியனானான் அடுத்தவன் அகதியானான்.
பலம் கொண்டவன் கரம் தூக்கினான்.
சினம் கொண்டவன் சிரம் வீழ்த்தினான்.
ஆண்டாண்டாய் இதே நிலைதான் வெண்புறாவே.
இது நிச்சயமாய் மாறும் ஒரு நாள் வெண்புறாவே.
தொலை தூரம் சென்றிடாதே வெண்புறாவே.
நீ திரும்பிவர நேரிடலாம் வெண்புறாவே.



## புதுவருட ஆசீர்

ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக
ஆண்டவர் தம் திருமுத்தை உன் மேல் ஒளிரச் செய்து
உன் மீது அருள் பொழிவாராக
ஆண்டவர் தம் திருமுகத்தை உன் மீது திருப்பி உனக்கு
அமைதி அருளாவாராக! (எண்.6:24-26)



விடைகள்
1. விழாமலிருக்க 2. சக்கரை வியாதி 3. பொய் சொன்னது

### மானுடத்தின் மான்பு எங்கே?

புத்தாயிரம் பூத்தாலும்
மிலேனியம் மிளிர்ந்தாலும்
மண்ணில்தான் மாற்றம்
மனங்களில் இல்லையே
அரும்புகின்ற காலை
மொட்டவிழ்க்குமுன் நாளை
விரும்புகின்ற பொழுதோ
விரியாது பூவாய்

சாவைக்கண்டு சலித்துப் போய்
புளித்துவிட்ட சிந்தையுடன்
மரணங்கண்டு மரத்துப் போய்
மலிந்து போன நேயத்துடன்
நிஜங்களின் நிழல்களை
நினைக்கையில் மறையுதிங்கு
மானுடத்தின் மான்பு இன்று

*செலர் வி.டி.எஸ்.அந்தோனிப்பிள்ளை*
*பறப்பாங்கண்டல்*

இப்பத்திரிகை மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஆசிரியரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org